Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras



ஜொலிக்கும்

கண்கள் . . .

நல்ல ஆரோக்கியத்தை அளிக்கின்றன. உங்களுடைய ஆரோக்கியத்திற்கும் அழகிற்கும், ஸ்திரீகளுக்கென்றே தயாரிக்கப்பட்ட வைடமின் சத்து நிறைந்த சாந்தி - அசோகாவை உட்கொள்ளுங்கள். ஏனெனில் அது வைடமின் சத்து நிறைந்த டானிக் மட்டுமல்லாமல் ஸ்திரீகளின் சகலவிதமான வியாதிகளையும் அறவே அகற்றும் அநேக நூற்றாண்டுகளாகப் புராதனமான அசோகா என்னும் மூலிகையும் சேர்த்துள்ளது.

சாந்தி அசோகா

சிறந்த கர்ப்பாசய ஔஷதம்

சாந்தி குடீரம், தனுகு, மேல்கோதாவரி ஜில்லா.

பூரண விற்பனை ஏஜண்டுகள் :

ஸ்ரீ கிருஷ்ண ஜெனரல் ஸ்டோர்ஸ், தனுகு.

மதராஸ் ஸ்டாக்கிஸ்டுகள் :

எஸ். விஸ்வநாதம் & கம்பெனி,

44, பந்தர் தெரு, சென்னை.



சொந்த

சுகாதாரத்திற்கு

ஐடியால், புத்துயிர் அளிக்கும் நறுமணம் கொண்ட, வியாதிகளைத் தடுக்கக் கூடிய மருந்து. வாய் அலம்பவும், தொண்டையில் கொப்புளிக்கவும், ஹெலிடோசிஸ் வராமல் தடுப்பதற்கும் அறவே நம்பிக்கையானது.

ITL



ஐடியால்


உயர்ந்த

கிருமி நிவாரணி

விற்பனை ஏஜண்டுகள் :

பெஸ்ட் & கம்பெனி லிமிடெட்

கல்கி



KALKI ஜூன் 18, 1944 4 அ



சிறந்ததை விரும்பும் சகலருக்கும்

நறுமணம் கமழும் சிகரெட்டை விரும்புவோர் டிலக்ஸ் டெனுரை வரவேற்பார்கள். சிகரெட்டின் நறுமணத்தின் உயர்நிலையை டெனுர் சிகரெட் அடைந்திருக்கிறதென அதை உபயோகிப்பவர்களால் கருதப்படுகிறது. உத்தரவாதமுள்ள 100% பொருக்கின வர்ஜீனியா புகையிலை இந்த சிகரெட்டுகள் செய்வதில் உபயோகப்படுவதே இதை எல்லாரும் விரும்புவதற்கு முக்கிய காரணம்.

tenor

டி லக்ஸ் டெனுர் சிகரெட்டு

ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

is truly a de Luxe Cigarette

JAMES CARLTON LTD, LONDON. EASTERN LICENCEES, POST BOX No. 470, CALCUTTA








னார். சிவப்பிரகாசம் மூச்சைப் பிடித்துக் கொண்டு அவர் சொல்வதைக் கவனித்தான்.

“உன் தகப்பனார் இளமைப் பருவத்தில் நடந்த விஷயம் இது. உன் தந்தை மிகவும் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவர் தான். அவர் ஜமீந்தாரின் ஒரே புதல்வியான உன் தாயாரைக் காதலித்தார். இந்தக் கல்யாணத்திற்கு ஜமீன்தார் சம்மதிக்க வில்லை. ஆயினும் அவர் விருப்பத்திற்கு விரோதமாக, சகல சௌபாக்கியங்களையும் துறந்து, உன் தந்தையை மணந்து எளிய வாழ்க்கையை மேற்கொண்டாள் உன் தாய். ஆனால், உன் தந்தை பணத்திற்காகவே உன் தாயை மணந்தார் என்பது பின்னால் தெரிந்தது. உன் தாயாரின் கையிலிருந்த நகைகளை யெல்லாம் விற்றுக் காலம் தள்ளிய பிறகு, உன் தந்தை மனைவியைப் பல விதங்களிலும் ஹிம்சை செய்யத் தொடங்கினார். பிறகு, நீ பிறந்தாய். உங்களை அவர் அனாதரவாய்த் தவிக்க விட்டு வேறு யாரையோ மணந்து கொண்டு கண்காணாத தேசம் போய் விட்டார். கணவன் தன்னைக் கைவிட்ட துக்கம் தாங்காமலும் பசி பட்டினியாலும் தாயார் உயிரை விட்டாள். அதிலிருந்து அனாதையான உன்னை நான் காப்பாற்றி வருகிறேன்.”

“ஐயோ! என் தாய்க்குத் துரோகம் செய்த பாவியா என் தந்தை? அவனைத் தந்தை என்று சொல்லிக்கொள்ள எனக்கு வெட்கமாயிருக்கிறது. அவன் இவ்வளவு பெரிய பாதகன் என்பதை நான் அறிய வில்லையே......அப்பா, அப்பா! இப்பொழுது எனக்குப் புரிகிறது, ஏன் என் முகத்தில் விழிக்க அவன் பயப்படுகிறான் என்று! ஆமாம், அவன் குற்றமே அவன் மனச்சாட்சியை உறுத்துகிறது!” என்றான் சிவப் பிரகாசம் ஆத்திரத்துடன்.

அப்பொழுது ஜன்னலோரம் சலசலப்புச் சத்தம் கேட்டது யார் காதிலும் விழவில்லை. அத்தனை நேரம் அவர்கள் சம்பாஷணையை ஒட்டுக் கேட்ட குமாரஸ்வாமியின் உடல் துடித்தது. பஞ்சநதத்தின் வாயிலிருந்து வெளி வந்த சொல்லைக் காட்டிலும், அவர் சொந்தக் குழந்தையின் சொல், நீட்டிய ஈட்டியைப்போல் அவர் மனதைப் பிளந்தது. உள்ளே ஓடி, “பஞ்சநதம் சொல்வது ‘பொய்! பொய்!’ என்று கதறி விடலாமா? நிஜத்தைச் சொல்லி விடலாமா?”—என்று ஒரு கணம் நினைத்தார். மறுகணம் தபசிகளுக்கு உள்ள மகத்தான சாந்தம் அவரை வந்தடைந்தது.

“ஆமாம்; என் குழந்தையின் கண்ணுக்கு நான் குற்றவாளியாகத் தோன்றினால் என்ன? பாதகனாகத் தோன்றினால் என்ன? இனிமேல் அவனை நான் காண முடியா விட்டாலும் பாதகம் இல்லை; இனிமேல் என் துரதிருஷ்டம் அவனைக் கொஞ்சம் கூடப் பீடிக்காதல்லவா? அவன் சௌக்கியமா யிருப்பானல்லவா? அது ஒன்றே எனக்குப் போதும்!” என்று வாய்க்குள் சொல்லிக்கொண்டே இருளில் மறைந்தார் குமாரஸ்வாமி.



இரண்டாவது ஆசாமி:—என்னா அண்ணே! இத்தனை மெதுவா நடக்கிறே! நான் முன்னாடி போறேன்; நீ பின்னாடி வா!



"இது என்ன சந்தேகம் திடீரென்று, குழந்தாய்! நீ என் குழந்தைதான்!"

"அப்பா! நான் உங்கள் சொந்தக் குழந்தை யில்லாவிட்டாலும் நீங்கள் என் தந்தையைக் காட்டிலும் மேலானவர். ஆனால் எனக்கு உண்மை தெரியவேண்டும். குமாரஸ்வாமிப் பிள்ளை என்பவர் அல்லவா என் தந்தை?"

பஞ்சநதம் தூக்கிவாரிப் போட்டவர்போல் தோன்றினார்.

சிவப்பிரகாசம் மேலும் தொடர்ந்து, "ஆமாம், அப்பா! எனக்கு எல்லா விஷயமும் தெரியும். அவர்தான் என் தந்தை. அவர் எழுதிய கடிதத்தை நான் பார்த்தேன்" என்றான்.

பஞ்சநதம் கனிந்த குரலில் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்:—

"சிவப்பிரகாசம்! குமாரஸ்வாமிதான் உன் தகப்பனார். ஆனால் சில காரணங்களை உத்தேசித்து உன்னை அவர் வளர்க்க முடியாமல் அவர் சிசுவிதனை என்னிடம் கொடுத்தார். அதிலிருந்து நான் உன்னை வளர்த்து வருகிறேன்."

"அது என்ன காரணம் என்றுதான் கேட்கிறேன்."

பஞ்சநதம் பெரும் கலவரத்துக்கு ஆளானவர்போல் தோன்றினார். அவர் மனத்தில் பெரும் புயல் வீசிற்று. குமாரஸ்வாமிப் பிள்ளை குழந்தையைத் தனியே விட்ட காரணத்தைச் சொன்னால், சிவப்பிரகாசம் ஒரு நாளும் நம்பப் போகிறதில்லை என்று அவருக்குத் தெரியும்.

தந்தையும் மகனும் ஒன்றாகி, சிவப்பிரகாசத்துக்கு அதனால் ஏதாவது எதிர்பாராத ஆபத்து வந்தால் என்ன ஆகுமென்பதை நினைக்கப் பஞ்சநதத்தின் மனம் நடுங்கிற்று. இத்தனை வருஷங்களாய்க் கண்ணினும் மேலாகக் கருதிக் காப்பாற்றி வந்த குழந்தைக்கு ஏதாகிலும் விபத்து நேர்ந்தால் என்ன செய்கிறது?

தம் அருமையான நண்பரைப் பற்றிப் பின்வரும் அபவாதத்தைச் சொல்ல வேண்டுமே என்பதை நினைக்க அவர் மனம் குன்றியது. ஆனால் சிவப்பிரகாசத்தைக் காப்பாற்ற அப்படிச் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று பஞ்சநதம் தீர்மானித்தார்.

"குழந்தாய்! உன் மனம் கஷ்டப்படக் கூடிய ஒரு விஷயத்தை இப்பொழுது சொல்லப்போகிறேன்" என்று கூற ஆரம்பித்துப் பஞ்சநதம் சிறிது நேரம் தயங்

குற்றவாளி!

வஸந்தன்

சாயங்காலம் மணி ஏழு இருக்கும். 'கும்'மென்று எங்கும் இருள் சூழ்ந்து விட்டது. தெருவிலுள்ள முனிசிபல் விளக்குகள் அந்த இருளைப் போக்கப் பரிதாபமாய்ப் போராடிக் கொண்டிருந்தன.

யாரோ ஒருவர் தலைவிரி கோலமாய் நீண்ட தாடியுடன் தெருவில் போய்க் கொண்டிருந்தார். விளக்கின் மங்கிய வெளிச்சத்தில் அவரது ஆடை கிழிந்து சர்வ கந்தலாகத்தான் இருந்தது.

வேகமாக நடந்து வந்த அந்த மனிதர் ஒரு வீட்டின் வாசலுக்கு வந்து நின்று, "பஞ்சநதம்! பஞ்சநதம்!" என்று மெதுவாகக் கூப்பிட்டார்.

மறு விநாடி அந்த வீட்டிற்குள்ளிருந்து ஒரு மனிதர் கையில் அரிக்கன் லாந்தருடன் வெளியே வந்தார்.

குமாரஸ்வாமி அவரை மௌனமாக இருக்கும்படி சமிக்ஞை செய்துவிட்டு, உட்பக்கம் சுட்டிக்காட்டி, "இருக்கிறானா?" என்று மெதுவாகக் கேட்டார். "இருக்கிறான்" என்றார் பஞ்சநதம். குமாரஸ்வாமி லாந்தரின் சுடரைச் சிறிது இறக்கித் திண்ணையின்மேல் வைத்தார். பிறகு இருவரும் உள்ளே சென்றார்கள்.

கூடத்தில் ஒரு மூலையில் இருந்த விளக்கடியில் உட்கார்ந்து கொண்டு பத்து வயதுள்ள பையன் ஒருவன் ஏதோ படித்துக்கொண்டிருந்தான். ரேழியின் மறைவிலிருந்து அவனைப் பார்த்த குமாரஸ்வாமியின் உடல் நடுங்கியது. அந்த நடுக்கத்தை வேகமாக நடுங்கிய அவர் தாடி இன்னும் நன்றாக எடுத்துக் காண்பித்தது. திடீரென்று உணர்ச்சி வசப்பட்டவராய் ஏதோ சொல்லத் துடித்த அவர் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டார்.

பிறகு இருவரும் வெளியே வந்து சாலையில் ஒன்றும் பேசாமல் சென்றார்கள். பிறகு, குமாரஸ்வாமி வாயைத்திறந்து "குழந்தைக்கு என்ன பெயர் வைத்திருக்கிறாய்?" என்றார்.

"சிவப்பிரகாசம் என்று பெயர் வைத்திருக்கிறேன்."

"அழகான பெயர்! உடம்புக்கு ஒன்றுமில்லாமல் சௌக்கியமா யிருக்கிறானா?"

"சௌக்கியமாகத்தான் இருக்கிறான்.... குமாரஸ்வாமி! அவன் இப்பொழுது முதல் பாரம் படித்துக் கொண்டிருக்கிறான். வகுப்பில் அவன்தான் முதலாவதாக இருக்கிறான். போன வருஷம் பரீக்ஷையில் முதல் மார்க் வாங்கினதற்காக பகவத்கீதைப் புஸ்தகமும் பவுண்டன் பேனாவும் பரிசாகக் கொடுத்திருக்கிறார்கள்......கொஞ்சம் இரு, அவற்றைக் கொண்டு வந்து காண்பிக்கிறேன்."

"வேண்டாம், அதை நான் என் கொடும் கண்ணால் பார்த்துத் தொலைக்க வேண்டாம். குழந்தை எப்படியாவது சௌகரியமாயிருக்கட்டும் ...... சரி, நாழியாகிறது; நான் போய் வருகிறேன்" என்றார் குமாரஸ்வாமி.

பிறக்கும் போதே, இந்த மாதிரி தலைவிரி கோலமாயும், தாடிச் சாமியாராயும் குமாரஸ்வாமி பிறக்கவில்லை. களமேடு ஜமீந்தாரின் அருமைக் குழந்தையாகத்தான் பிறந்தார். களமேடு ஜமீன் என்றால் அந்த ஜில்லாவிலேயே பிரசித்தம். செருக்கும் சிறப்புக்கும் உதாரணமாக அந்த ஜமீனைத்தான் எல்லோரும் சொல்வார்கள்.

குமாரஸ்வாமி எந்த வேளையில் பிறந்தாரோ தெரியவில்லை; காளான்கள் முளைப்பது போல் திடீரென்று கட்சிகளும் கலவரங்களும் ஜமீனில் முளைத்தன. அடிதடிகளும் குத்து வெட்டுக்களும் அமர்க்களமாய் நடந்தன. கேஸ்களும் தோன்றி முடிவில் ஜமீன் சின்னாபின்னமாகச் சிதறிவிட்டது. கொஞ்ச காலத்திற்கெல்லாம் குமாரஸ்வாமியின் தாய் தந்தையர் காலமானார்கள்.

தாய் தந்தையற்ற குமாரனை அவர் தாய் மாமன் எடுத்துக் காப்பாற்றினார். அவர் பெரிய வியாபாரி; ஏராளமான நிலபுலன்களும் இருந்தன. ஆனால் குமாரஸ்வாமி வளர்ந்து ஐந்து வயது ஆவதற்குள், அவர் மஞ்சள் காகிதம் கொடுத்துவிட்டுப் புதுச்சேரியைப் பார்க்க எடுத்தார் ஓட்டம்.

அதற்குப் பிறகு, குமாரஸ்வாமி எங்கெல்லாமோ சொந்தக்காரர்கள் வீட்டில் வளர்ந்து

'கரிகாலன்' என்ற பட்டப் பெயரைப் பெற்றார் — அவர் எங்கெல்லாம் காலடி எடுத்து வைக்கிறாரோ அந்த இடம் எல்லாம் கரியாகப் போய்விடும் என்ற காரணத்தினால்தான்.

இவ்வளவு அருமை பெருமை வாய்ந்த குமாரஸ்வாமிக்கு யாரோ விஷயம் தெரியாமல் பெண் கொடுக்க முன் வந்தார்கள். கலியாணமாகிச் சில வருஷங்கள் தம் துரதிருஷ்டத்தையும் மறந்து குமாரஸ்வாமி இருந்து வந்தார். மனைவியை உயிரினும் மேலாக நேசித்து வந்தார். ஸ்வர்ண விக்ரஹங்கள் போல் இரண்டு குழந்தைகள் பிறந்தன. ஆனால், திடீரென்று அவரது குழந்தைகள் ஒவ்வொன்றாக இறந்து விட்டன. இதற்குப் பிறகுதான் அந்த மனம் தாளாத சம்பவம் நடந்தது. சின்னஞ் சிறு குழந்தையை — மூன்றாவது குழந்தையை — விட்டுவிட்டு அவர் மனைவி பிரசவ அறையில் காலமாகி விட்டாள். குமாரஸ்வாமி கரைகாணாத் துயரத்தில் மூழ்கி விட்டார்.

ஆவேசம் வந்தவர்போல் குமாரஸ்வாமி குழந்தையைத் தூக்கிக்கொண்டு தம் நண்பர் பஞ்சநதத்தின் வீட்டுக்குப் போனார். குழந்தையை அவர் கையில் கொடுத்து, "அப்பா! நீதான் என் குழந்தையை வளர்க்க வேண்டும். இது என் குழந்தை என்றா சொன்னேன்? இல்லை, இல்லை; ஒரு நாளும் இல்லை. இது என் குழந்தை என்று நினைத்தாலே என் துரதிருஷ்டம் இதையும் பற்றிக்கொள்ளும்; இதன் உயிருக்கும் ஆபத்து வந்துவிடும். நான் நேசித்த எதுவும் எனக்குத் தங்குவதில்லையல்லவா? வேண்டாம், இனிமேல் இது உன் குழந்தையாகவே இருக்கட்டும்! இது எப்படியாவது உயிரோடு இருந்தால் போதும்" என்று சொல்லிக் கொடுத்துவிட்டு, உலகை வெறுத்துச் சந்நியாசிக் கோலம் பூண்டார்.

ஆனால், அவரையும் அறியாமல் புத்திர வாஞ்சை குமாரஸ்வாமியைப் பஞ்சநதத்தின் வீட்டுக்கு இழுத்துக் கொண்டு வரும். ஒருவரும் அறியாமல் குமாரஸ்வாமி வந்து, திண்ணையில் தவழ்ந்து விளையாடும் குழந்தையைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் சொரிவார். அதற்குப் பிறகு பத்து வருஷ காலம் புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தார். மறுபடியும், குழந்தையின் நினைவு காந்தம்போல் அவரைக் கவர்ந்திழுத்தது.

இம்முறை குழந்தையைக் காணவந்த போது, அதை வாரியெடுத்து ஆலிங்கனம் செய்ய வேண்டுமென்று அவர் உள்ளம் துடித்தது. ஆனால், மறுகணமும் "இந்தப் பாழும் மனசு என்னவெல்லாம் எண்ணுகிறது? எனக்கு இந்தக் குழந்தையை நேசிக்க உரிமை ஏது?" என்று நினைத்தே, "பஞ்சநதம்! பஞ்சநதம்!" என்று கூப்பிட்டார். அதற்குப் பிறகுதான் கதையின் ஆரம்பத்தில் கூறிய சம்பவங்கள் நடந்தன.

சிவப்பிரகாசம் வளர்ந்து பெரியவனாகிக் கொண்டிருந்தான். பரீட்சையில் தேறி, அவ்வூர் முனிசிபல் ஆபீஸில் குமாஸ்தாவாகச் சேர்ந்தான்.

அவன் உள்ளத்தில் வெகு நாட்களாக ஒரு போராட்டம் எழுந்திருந்தது யாருக்கும் தெரியாது. அந்தப் போராட்டம் எப்பொழுது ஆரம்பமாயிற்றென்றால், ஒரு நாள் அவன் பஞ்சநதத்தின் பெட்டியைத் துருவிக்கொண்டிருந்த போதுதான். குமாரஸ்வாமி பஞ்சநதத்திற்கு எழுதிய கடிதத்தில் ஒன்று அகஸ்மாத்தாக அவன் கைக்குக் கிடைத்தது. அதில் பின்வருமாறு எழுதியிருந்தது:

"நீ என்னுடன் பேசிக்கொண்டிருந்த போது சிவப்பிரகாசத்தின் கல்யாணத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தாய். நான் மறுபடியும் யோசனை செய்து பார்த்தேன். நீ கல்யாணத்தை நடத்துவதைப் பற்றி எனக்கு ஆக்ஷேபனை இல்லை. ஆனால் நான் அதற்கு வர முடியாது. என் கண்ணால் குழந்தையை மணக்கோலத்தில் பார்க்க நான் விரும்பவில்லை. அதனால் குழந்தைக்கு ஆபத்து வந்துவிடுமோ என்றுதான் பயப்படுகிறேன்.

குமாரஸ்வாமி."

இதைப் படித்து முடித்ததும் சிவப்பிரகாசம் தலை சுழன்றது. ஹிருதய ஓட்டமே நின்று விட்டதுபோலிருந்தது. சிந்தனா சக்தி மீண்டும் வந்ததும், சாதுர்ய உணர்ச்சியை அடைந்தான்.

அன்றைக்குப் பஞ்சநதம் விளக்கு வைத்து வெகு நேரம் கழித்து வீட்டுக்கு வந்தார்.

"உங்களை இதுகாறும் என் சொந்தத் தந்தை யென்றே எண்ணியிருந்தேன். ஆனால் அது தவறு என்று எனக்குத் தோன்றுகிறது" என்றான் சிவப்பிரகாசம்.

அகப்பட்டான்!

பகீரதன்

அந்தப் போலீஸ்காரன் எதற்காக அப்படி மறைந்து மறைந்து வருகிறான்? ஆம், யாரையோ பிடிப்பதற்காகத் தான் இருக்கவேண்டும்.

தூரத்தில் நாலு பேர் வருகிற சத்தம் கேட்கவே, பக்கத்திலிருந்த 'ஷெல்ட'ருக்கு மறைவில் பதுங்கினான் அந்த ஆசாமி. நான்கு தடியர்கள் கையில் தடியுடன் வந்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அவர்கள் பேசிக்கொண்டதில் சில வார்த்தைகள் போலீஸ்காரனுடைய காதில் விழுந்தன.

"நாமும் நாலு பேர் இருக்கிறோமே, அந்தக் கண்ணுசாமியைப் பார்! ஒரே ஒரு மனிதன் போலீஸ் இலாகாவையே ஆட்டி வைக்கிறான்!" என்றான் அவர்களில் ஒருவன்.

இதற்குமேல் அவர்களுடைய பேச்சைக் கேட்க இஷ்டமில்லாதது போல் போலீஸ்காரன் அவர்களை நெருங்கினான். போலீஸ்காரனைக் கண்ட அந்த நால்வருக்கும் முதலில் கொஞ்சம் பயமாகவே இருந்தது. பிறகு, "நாம்தான் நாலு பேர் இருக்கிறோமே!" என்ற தைரியமோ என்னவோ, போலீஸ்காரனை அலட்சியமாக ஒரு பார்வை பார்த்து விட்டு அவர்கள் மேலே நடக்க ஆரம்பித்தார்கள்.

"ஏய், யாரது? நில்லுங்கள்!" என்று அதட்டினான் போலீஸ்காரன்.

"தெரியவில்லையா, நாங்கள் யார் என்று? எல்லாம் இந்த ஊர் ஆசாமிகள் தான்!" என்று அலட்சியமாகப் பதில் அளித்தனர் அந்த நால்வரும்.

"இந்த நேரத்தில் கையில் தடியுடன் எங்கே கிளம்பினீர்கள்?"

"கண்ணுசாமியைத் தேடிக் கொண்டு"

"என்னிடம் பொய்யா சொல்லுகிறீர்கள்? எனக்குக் கண்ணுசாமியையும் தெரியும், அவனுடைய நண்பர்களையும் தெரியும். நீங்கள் எல்லாம் அவனுடைய நண்பர்கள்தானே?"


"என்ன ஐயா, எங்களைக் கொண்டே கண்ணுசாமியைக் கண்டு பிடித்து, போலீஸார் பரிசு கொடுப்பதாகச் சொல்லும் 1000 ரூபாயைத் தட்டிக் கொண்டு போய்விடலாமென்று பார்க்கிறீரா?"

"அந்த ஆசை எனக்கில்லை. ஏனெனில், கண்ணுசாமியைக் கண்டுபிடிக்கக் கண்ணுசாமியால்தான் முடியும்! நீங்கள் எல்லாம் யார்? உண்மையைச் சொல்லுங்கள்" என்றான் போலீஸ்காரன்.

"ஆமாம், நாங்கள் திருடர்கள் தான்! நீ எங்களை என்ன செய்து விடுவாய்?" என்று எதிர்பாராத விதமாக அவர்கள் போலீஸ்காரனை எதிர்க்க ஆரம்பித்து விட்டனர்.

"நான் போலீஸ்காரனா என்ன, உங்களை ஏதாவது செய்வதற்கு? நான் தான் கண்ணுசாமியாச்சே!" என்றான் அந்தப் போலிப் போலீஸ்காரன்.

இதைக் கேட்டதும், அந்த நான்கு பேருக்கும் தூக்கி வாரிப் போட்டது. "என்ன? நீதானா அந்த கண்ணுசாமி? அடாடா! என்ன பொருத்தம்! இத்தனை நாளாக உன்னைப் பிடிக்க வேண்டும் என்று கஷ்டப்பட்டு வந்த போலீஸ்காரர்கள்தான் நாங்களும்!" என்று சொல்லிக்கொண்டே அவர்கள் கண்ணுசாமியின் கையில் விலங்கைப் போட்டனர்!



★


நவீனக் கணக்கு

வாத்தியார்:— அடே, அரட்டை! ஒருத்தன் 20 ரூபாய்க்கு ஒரு அரிசி மூட்டை வாங்கி 30 ரூபாய்க்கு விற்றால் என்ன லாபம் கிடைக்கும்?

மாணவன்:— அதிக லாபத்திற்கு விற்றால் சர்க்காரிலே 50 ரூபாய் அபராதம் போடராளே, ஸார்! அவனுக்கு 40 ரூபாய் நஷ்டம்தான்!......

★

தெரிந்த விஷயம்



நிமிஷக் கதைகள்

சோமு மாம்பழம் வாங்கப் போனான். ஒரு கடைக்காரனிடம், "ஏனப்பா! இந்த மல்கோவா என்ன விலை? பழம் நன்றாயிருக்குமா?" என்று கேட்டான்.

"என்ன, சாமி! அப்படிக் கேட்கிறீங்களே? எடுங்க சாமி! பழம் கற்கண்டு மாதிரி இருக்கும். டஜன் மூணு ரூபா தான்!" என்றான் பழக்காரன்.

"மூணு ரூபாயா? அடே அப்பா! அசாத்தியமாயிருக்கே விலை! சரி, சரி! ஒரு ரூபாய்க்குக் கொடுப்பதானால் சொல்லு, ஒரு டஜன் எடுத்துக் கொள்கிறேன்."

"சரி, எடுங்க சாமி! மொத மொதல்லே வந்த பேரத்தைச் சும்மா விடக் கூடாதென்று கொடுக்கிறேன்!"

"பழம் நன்றாயிருக்குமோ, இல்லையோ?"

"ஆமாம், டஜன் ஒருரூபாய்க்கு வாங்குகிற பழம் கற்கண்டாகவா இருக்கும்?"

—ராமு.

பட்டணத்து ஆசாமி ஒருவர், தம்முடைய கிராமத்திற்குச் செல்ல நேர்ந்தது. அந்தப் பாழாய்ப் போன கிராமத்திற்குப் போய்த் தொலைய வேண்டுமானால் ரயில், பஸ், நடை எல்லாம் வேண்டும். இப்படியெல்லாம் அமளி துமளிப்பட்டுச் சென்ற அவருக்கு வழியில், "பகல் சாப்பாடு எங்கே தவறிவிடுமோ?" என்ற கவலை வந்துவிட்டது. ஆகவே, அவர் வழியில் கண்ட ஒரு கிழவனை, "என்ன மணி இருக்கும் இப்போ?" என்று விசாரித்தார்.

"பன்னிரண்டு."

"பன்னிரண்டுதானா? இன்னும் அதிகமாயிருக்குமென்று நினைச்சேனே!"

"என்னாங்க? அப்படிச் சொல்றீங்க? இங்கே யெல்லாம் அதுக்குமேலே ஆகிறதில்லிங்க! பன்னிரண்டுக்கு அப்புறம் ஒண்ணு ரெண்டுன்னு மறுபடியும் அடியிலிருந்துதான் தொடங்குங்க!" என்றான் அந்தக் கிழவன்.

—ஆர். ஆர். எஸ். மணியன்

யாய் அடித்துக் கொன்னுகிறோம்" என்று இந்திய ரயில்வே போர்டார் சொல்வது காதில் விழுகிறது.

ஆம், நாங்கள் சொல்வது தெரிகிறது. ஆனால் அதற்காக என்னைத் தின்டன் என்றும் மூன்டன் என்றும் வையச் சொல்லியிருக்கிறதா என்ன? எனக்கு எடையே போதாது, நிறையச் சாப்பிட வேண்டும், இல்லாவிடில் ஒரு வருஷ காலத்தில் இவ்வுலகை விட்டு விடை பெற்றுக்கொண்டு விடுவேன் என்று எங்கள் குடும்ப டாக்டர் சென்ற இருபது வருஷ காலமாகச் சொல்லிக் கொண்டு வருகிறார். ஆனால் இந்த ரயில்வே போர்டார் என்னவென்றால் என்னைத் தின்டன் என்று அழைக்கிறார்கள்!

நான் இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்யும் போதெல்லாம் என்னுடைய எடை 2½ டன் ஆகி விடுகிறதாம்! சாதாரணமாக, ஒன்றாவது, இரண்டாவது வகுப்புப் பிரயாணிகள் பிரயாணம் செய்யும் பெட்டியில் 25 பேர்கள் செல்லலாமாம். இந்த 25 பேர்கள் செல்லும் இடத்தில் சாமானாக ஏற்றினால் 65 டன் ஏற்றலாமாம். ஆகவே 65 டன் எடை ஏறவேண்டிய இடத்தில் 25 பேர் ஏறுவதால் நம் ஒவ்வொருவர் எடையும் சுமார் 2½ டன் ஆகி விடுகிறதாம்!

எப்படி இருக்கிறது நியாயம்! நான் சொல்வது என்னமோ வேடிக்கையாகப் படுகிறதே ஒழிய உங்களுக்கு இன்னும் நிஜம் என்று படவில்லை. நீங்கள் இப்படிச் சந்தேகப்படுவீர்கள் என்றுதான் முன் பக்கத்தில் இந்த ரயில்வே போர்டார் தங்கள் விளம்பரத்துக்கு உபயோகப்படுத்தும் படத்தை அப்படியே எடுத்துப் போட்டிருக்கிறேன். என்ன, இப்பொழுதாவது உங்களுக்கு என் வார்த்தையில் நம்பிக்கை ஏற்படுகிறதா?

ஆனால் நல்ல வேளையாக இந்த மூன்றும் வகுப்புப் பிரயாணிகளைப் பற்றி இந்த ரயில்வே போர்டார் ஒன்றும் சொல்லவில்லை. 65 டன் சாமான் ஏற்றக்கூடிய இடத்தில் மூன்றும் வகுப்புப் பிரயாணிகளாக ஏற்றினால் 650 டன் ஏற்றலாம் என்னும் விஷயம் அவர்களுக்குத் தெரிந்துதான் பேசாமல் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

ஒவ்வொரு சமயம் இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது, பழைய ரயில்வே போர்டாரா இப்படி மாறி விட்டார்கள் என்று இருக்கிறது.

இந்திய மக்கள் எல்லோரும் புண்யத்தை மூட்டை மூட்டையாகக் கட்ட வேண்டும், அந்த மூட்டையைத் தூக்கிக் கொண்டு கூண்டோடு கைலாசம் போக வேண்டும் என்று யாராவது வெகு அக்கறையாக இருந்தார்கள் என்றால் அது இந்த ரயில்வே போர்டார்தான்.

"இப்படி உங்கள் வாழ்நாளையெல்லாம் வீணாக்குகிறீர்களே? கட்டை இருக்கையில் சிதம்பரம் போய், நீங்கள் காணவேண்டாமோ? இருகண் இருக்கும் போதே பார்க்க வேண்டாமோ? ஐயன் திருநடனம் காணவேண்டாமோ?" என்றெல்லாம் நம்மை உற்சாகப்படுத்திக் கழுத்தைப் பிடித்து "சிதம்பரத்துக்குப் போ" என்று தள்ளியது யார்?

"நீங்கள் காசிக்குப் போக வேண்டாமா! காசி விசுவநாதரைத் தரிசிக்க வேண்டாமா? உங்கள் பாவ மூட்டைகளை யெல்லாம் கங்கையில் கரைக்க வேண்டாமா? அந்தப் புனிதமான கங்கையில், பகீரதன் கடும் தவம் புரிந்து கைலாசத்திலிருந்து பூலோகத்துக்குக் கொண்டு வந்த கங்கையில் நீங்கள் ஸ்நானம் செய்து புண்யம் சம்பாதிக்க வேண்டாமா?" என்று நம் மனமுருக உபதேசித்து நம்மைக் காசிக்குத் துரத்தியது யார்?

வேறு யார், எல்லாம் அந்த ரயில்வே போர்டார்தான்.

அப்படித்தான் காசிக்குப் போனேனும், காசியிலேயே இருக்க விட்டார்களா? காசிக்குப் போன பலன் அங்கிருந்து ராமேசுவரத்துக்குப் போனால் தான் கிடைக்கும் என்று நம்மை ராமேசுவரத்துக்குத் துரத்தினார்கள்.

இப்படியாக இந்தியாவில் உள்ள எல்லா க்ஷேத்திரங்களுக்கும், ஸ்தலங்களுக்கும் நம்மைப் போகும்படி தூண்டிக் கொண்டிருந்தார்கள்.

பஞ்சாங்கத்தில் ஏதாவது உத்ஸவங்கள் விட்டுப்போனாலும் போகும், ரயில்வே கால அட்டவணைப் புஸ்தகத்தில் விட்டுப்போகாது. ஸ்தல புராணங்கள் பௌராணிகர்களுக்கு மறந்து போனாலும் போகும், ரயில்வேக்காரர்களுக்கு மறந்து போகாது.


அப்படியிருந்த ரயில்வேக்காரர்கள் தான் இப்பொழுது "பிரயாணம் செய்யாதே" என்கிறார்கள்.

இதையெல்லாம் பார்க்கும்பொழுது, "யுத்தம் எப்பொழுது முடியும்!" என்று கேட்கத் தோன்றுமா, தோன்றாதா, நீங்களே சொல்லுங்கள்!

யுத்தம் எப்பொழுது முடியும்!

நாடோடி

பட்டணம் கல்தா



முன்னே கடிவாளம் மூன்றுபேர்
போட்டிழுக்கப்
பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள —
என்னேரம்
வேதம் போம் வாயான் விகடராமன்
குதிரை
மாதம் போம் காத வழி!

இந்திய சுதந்திரத்தைக் கொண்டு வராத யுத்தம், தன் கையில் எடுத்துக் கொண்டுவந்த பெட்டியில் வேறு என்ன தான் கொண்டு வந்தது?

வந்ததும், வராததுமாக யுத்தம் எல்லாருக்கும் மஞ்சள் கடிதாசி நீட்டியதைப் பற்றிச் சென்ற இதழில் பார்த்தோம். பெட்டியில் வேறு இன்னும் என்ன சாமான்கள் இருக்கின்றன என்று சற்றுப் பெட்டியைத் திறந்து பார்ப்போம்.

"......ஐயோ! இது என்ன? யார் இப்படி 'பட்டணம் கல்தா' கொடுத்துக் கழுத்தைப் பிடித்துத் தள்ளுகிறது?"

ஓஹோ! புரிகிறது. யுத்தம் தன் பெட்டியில் "பட்டணம் கல்தா" வைத் தூக்கிக்கொண்டு வந்திருக்கிறது.

ஆம், யுத்தம் தன்னுடன் கொண்டு வந்த பொருள்களில் இந்தப் பட்டணம் கல்தாவும் ஒன்று.

"பட்டணம் கல்தா" என்று சிறப்பாகப் பட்டணத்தின் பெயரை எதற்காகச் சேர்த்திருக்கிறார்கள் என்று எனக்கு வெகு காலம் விளங்கவில்லை. கும்பகோணம் வெற்றிலை, சிவபுரி புகையிலை என்பது போல் பட்டணத்தில் கிடைக்



கும் கல்தா மற்ற ஊர்களில் கிடைக்கும் கல்தாவைவிடச் சிறப்பாக இருக்கலாமோ என்று தோன்றிற்று.

ஆனால் எல்லாவித கல்தாக்களையும் சீர்தூக்கிப் பார்த்து, பட்டணம் கல்தா தான் உயர்ந்தது என்று தீர்ப்புச் சொல்வதற்கு வேண்டிய அநுபவம் எனக்கு வெகு காலம் — அதாவது இந்த யுத்தம் வரும் வரை — ஏற்படவே யில்லை.

யுத்தமும் வந்தது, எனக்கு எங்கு சென்றாலும் கல்தாவும் கிடைத்தது. ரயிலில் ஏறவேண்டுமா? கல்தா! ரயிலை விட்டுக் கீழே இறங்க வேண்டுமா? கல்தா! ரயிலில் இந்த மூலையிலிருந்து சற்று இருக்கும் அந்த மூலைக்குப் போக வேண்டுமா? கல்தா! சற்று இருக்கும் இடத்திலிருந்து நம் மூட்டை வைத்திருக்கும் இடத்துக்குப் போக வேண்டுமா? கல்தா! நம் மூட்டை வைத்திருக்கும் இடத்திலிருந்து நம் டிரங்குப் பெட்டி வைத்திருக்கும் இடத்துக்குப் போகவேண்டுமா? கல்தா! இப்படியாக எல்லா ஊர்களிலும், எல்லா ரயில் வண்டிகளிலும் எங்கே திரும்பினாலும் கல்தா!

விஷயம் தெரிந்தவர்கள், அதாவது யுத்தம் வந்த பிறகு ரயிலில் பிரயாணம் செய்துள்ளவர்கள், எதற்காக நான்



இப்படி என் சாமான்களை மூலைக்கு ஒன்றாக வைத்திருக்கிறேன் என்று கேட்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.


யுத்தம் வந்த பிறகு, ரயிலில் ஏறும் போதெல்லாம்—"என்ன ஐயா! நினைத்த போது ரயில் பிரயாணம் செய்கிறீரா?" என்று யாராவது சண்டைக்கு வந்து விடாதீர்கள்—எல்லாம்,என் பிரயாணம் அவசியந்தானா என்று என்னையும், என் பணப் பையையும் விசாரித்துக்கொண்ட பின்னரே பிரயாணம் செய்கிறேன்.

நான் ரயில் பிரயாணம் செய்ய நேரும் போதெல்லாம் எனக்கு 'விகடராமன் குதிரை' ஞாபகம் வரும்.

எனக்கு முன்னால் வண்டியைக் கைப் பற்றிக் கொண்டிருக்கும் நண்பர்கள் என்னைப் பிடித்துப் பின்னுக்குத் தள்ள, எனக்குப் பின்னால் வண்டியில் ஏறுவதற்காகக் காத்துக்கொண்டிருக்கும் நண்பர்கள் தாங்கள் ஏறவேண்டுமே என்ற கவலையினால் என்னை முன்னுக்குப் பிடித்துத் தள்ள, இருவருக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் என் பாடும், என் மூட்டை முடிச்சுகளின் பாடும் வெகு திண்டாட்டமாகிவிடும்.

இந்தக் கூத்தில் என் மூட்டை முடிச்சுகள் தாமாகவே வண்டிக்குள் ஏறி ஆளுக்கொரு மூலையில் அமர்ந்து விடும். பிறகு கடைசியில் எப்படியோ முண்டியடித்துக்கொண்டு வண்டியில் தொத்திக்கொள்ளும் எனக்கு மூட்டை முடிச்சுகள் போன இடம் தெரியாது. அங்கவஸ்திரத்தில் பணத்தையும், டிக்கெட்டையும் சேர்த்து வைத்துப் போட்டிருக்கும் முடிச்சைப் பற்றியும் தான் சொல்கிறேன்.

"இதற்காகத்தான் ஐயா, பிரயாணம் செய்யாதீர்கள், பிரயாணம் செய்யாதீர்கள் என்று நாங்கள் அடி



பல சரக்கு



பண்டித ஜவாஹர்லால் நேரு தென்னாட்டுச் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்த காலையில் புதுக்கோட்டை சமஸ்தானத்துக்குள் நுழைய நேர்ந்தது. அப்பொழுது சமஸ்தான சர்க்கார் நேருவின் கார் உள்ளே நுழையக்கூடாது என்னும் தடை யுத்தரவைப் போட்டார்கள். உத்திரவு கையில் கிடைத்ததும் ஜவாஹர், "இந்த மகத்தான புதுக்கோட்டை ஏகாதிபத்தியத்தைக் கடப்பதற்குக் கார் வேறு கேடா? நான் நடந்தே செல்கிறேன்" என்று காரிலிருந்து இறங்கி நடக்க ஆரம்பித்தார். ஸ்ரீ நேரு புதுக்கோட்டை எல்லையைக் கடப்பதற்குள் புதுக்கோட்டை சர்க்கார் தங்கள் தடை யுத்தரவை வாபஸ் வாங்கிக் கொண்டனர்!

★



இரகுநாத சேதுபதி இராமநாதபுரத்தில் ஆட்சி புரிந்த காலத்தில் அவர் சமஸ்தானத்தில் அமிர்த கவிராயர் என்னும் புலவர் இருந்தார். ஒரு சமயம் அவர் சேதுபதிமீது பாடிய துறைக் கோவை அரங்கேற்றப்பட்டது. அப்பொழுது அமிர்தகவிராயர் ஒவ்வொரு செய்யுளாகக் கூறி வந்தார். ஒவ்வொரு செய்யுளும் ஆனவுடன் அரசர் ஒரு பொன் தேங்காயைப் புலவருக்குப் பரிசாக அளித்தார். இப்படி இருக்கையில் சொற்சுவையிலும், பொருட் சுவையிலும் மற்றெல்லாவற்றையும் தூக்கி அடிக்கும்படியான செய்யுள் வந்தது. அதற்கும் அரசர் வழக்கம் போலவே ஒரு பொன் தேங்காய் பரிசாக அளித்தார். இதைப் பார்த்துவிட்டுப் பக்கத்தில் இருந்த புலவர் ஒருவர், "இந்தச் செய்யுள் மிகவும் அருமையானது. இதை மகாராஜா அவர்கள் நன்றாக உடைத்துப் பார்த்து இதன் சிறப்பை உணர வேண்டும்" என்றார். அதற்கு அரசர், "நாம் இதன் சுவையை நன்கு உணர்ந்தோம் என்பது அந்தத் தேங்காயை உடைத்துப் பார்த்தால் தெரியும்" என்றார். உடனே அந்தப் பொன் தேங்காயை உடைத்துப் பார்த்தார்கள். அதனுள்ளே மாணிக்கப் பரல்கள் இருந்தன!

★



இங்கிலாந்தில் எலிஸபெத் மகாராணி ஆட்சி புரிந்துகொண்டிருந்தபோது, ஸர் வால்ட்டர் ராலே என்பவர் முதன் முதலாக அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குப் புகையிலையைக் கொண்டு வந்தார். அந்தக் காலத்து ஆங்கிலப் பிரபுக்கள் அழகான தாடி வளர்ப்பார்கள். ராலேக்கும் தாடி இருந்தது. அமெரிக்காவிலிருந்து அவர் திரும்பியதும் ஒருநாள் தம் வீட்டில் சாய்மான நாற்காலியில் உட்கார்ந்து புகையிலைச் சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார். அவருக்குப் பின்புறமாக வந்த வேலைக்காரன், தம் எஜமானரின் வாயிலிருந்து புகை வருவதைக் கண்டு, அவருடைய தாடியில் தீப்பிடித்து விட்டது என்று எண்ணி விட்டான். உடனே ஓடோடிப் போய் ஒரு வாளி ஜலம் கொண்டு வந்து அவர் தலையில் கொட்டித் தீயை அணைத்தானாம்!

★



அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டனிலிருந்த ஜப்பானிய ஒற்றன் ஒருவன் ஜப்பானுக்குப் பின் வருமாறு ஒரு கடிதம் எழுதினான்:

"நம்முடைய விமானங்கள் இங்கு சர்க்கார் கட்டடங்களின் மீது குண்டு போட்டு ஒன்றும் பிரயோஜனமில்லை. ஏனெனில் ஒரு கட்டடத்தின் மீது குண்டு போட்டு அதையும், அதில் உள்ள சிப்பந்திகளையும் அழித்தாலும் இன்னொரு கட்டடத்தில் இதே வேலையை வேறு சில சிப்பந்திகள் செய்து கொண்டிருக்கிறார்கள்!"

ஏ, சில்லறைப் பஞ்சமே!

மௌனி

★

ஏ, சில்லறைப் பஞ்சமே! நீ சிரஞ்சீவியா யிருப்பாயாக! இன்னும் ஓரணா, இரண்டணா சில்லறைகூடக் கிடைக்காம லிருக்கச் செய்வாயாக! நீ சந்திர சூரியர் இருக்கும்வரையில் சாகா வரம் பெற்று நீடூழி வாழ்வாயாக!

உன்னால் எங்களுக்கு எவ்வளவு நன்மை தெரியுமா? இந்தக் கஷ்ட காலத்தில் நீ எங்களுக்குச் செய்யும் மகத்தான உதவியை நாங்கள் என்றுமே மறக்க முடியாது. முன்னெல்லாம் யாராவது ஒரு பிரயாணி காசைக் கொடுத்து விட்டு, டிக்கெட் வாங்குவதற்குத் தற்செயலாக மறந்து போனால் தான் அந்தக் காசு எங்களுக்கு மேல் வரும்படியாகக் கிடைக்கும். அதுவும் எங்களை அப்படியே சேர்ந்து விடாது. அதில் அந்தப் பாழாய்ப் போன இன்ஸ்பெக்டர்களுக்கு வேறு கொஞ்சம் கொடுத்து, அவர்கள் வாயை மூடவேண்டும்!



ஆனால் இப்பொழுது உன்னால் கிடைக்கும் வரும்படியில் மேற்படி தொல்லை யெல்லாம் கிடையாது. என்ன, "என்னால் எங்களுக்கு எப்படி மேல் வரும்படி கிடைக்கிறது? என்றா கேட்கிறாய்? சொல்லுகிறேன். இரண்டணாவைக் கொடுத்து ஒருவர் ஒன்றே காலணா டிக்கெட் கேட்கிறார். உன்னை வியாஜமாக வைத்துக் கொண்டு நாங்கள், "சில்லறை இல்லை!" என்கிறோம். இதைக் கேட்டு அந்த ஆசாமி எங்கள் வண்டியை விட்டு இறங்கிவிட முடியுமா? அப்படி இறங்கினால்தான் இறங்கட்டுமே! அதனாலென்ன? அவருக்கு வேறு எந்த வண்டியில், "சில்லறை இருக்கிறது!" என்று சொல்லிக் கொடுத்துவிடப் போகிறார்கள்?

இது தெரியாத சில ஆசாமிகள், எங்கள் வண்டியை விட்டு இறங்கி விட்டு, அப்புறம் திருதிருவென்று விழித்துக் கொண்டு திண்டாடுவதுண்டு.

இந்த ரகசியத்தை சில ஆசாமிகள் எப்படியோ தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எங்களிடம் இல்லாத சில்லறையை எங்களுக்கே பேசாமல் அர்ப்பணம் செய்து விடுகிறார்கள்! எப்படியாவது அவர்கள் போகவேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்தால் சரி!

இதையெல்லாம் பார்த்து விட்டு, எங்கள் கம்பெனிக்காரர்கள் காலணாவுக்கு ஒரு காகித நோட்டு அச்சிட்டு விநியோகம் செய்யச் சொன்னார்கள். அதைப் பார்த்த பிரயாணிகள் எங்களை என்ன கேட்டார்கள் தெரியுமா?

"இந்தக் காகித நோட்டைக் கொடுத்து விட்டுக் காலணாவை வாங்கிக் கொள்வதற்காக உங்கள் கம்பெனிக்கு நாங்கள் வர வேண்டுமல்லவா? அதற்கு எவ்வளவு செலவாகும்?" என்று கேட்டார்கள். "அப்படியே வந்தாலும், நாங்கள் பஸ்ஸிலோ, டிராமிலோதானே வரும்படியாக இருக்கும்? அப்போது வேறு நாங்கள் இந்தக் காலணா நோட்டுக்களை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டுமாக்கும்!" என்றும் எரிந்து விழுந்தார்கள்.

"வேண்டுமானால் இந்தக் காலணா நோட்டுக்களை நீங்கள் எந்தச் சமயத்திலும் எங்கள் வண்டியில் ஏறும்போது உபயோகித்துக் கொள்ளலாம், ஸார்!" என்று அனுதாபத்துடன் சொல்லிப் பார்ப்போம். அதற்கும் அவர்கள், "அந்தக் காலணா நோட்டை வைத்துக் கொண்டு முக்காலணா டிக்கெட் வாங்க வேண்டுமென்றால் அரையணாவைத் தேடிப் பிடிக்க வேண்டுமே! அந்தத்தொல்லைக்கு என்ன செய்வது?" என்று கேட்பார்கள்.

இந்தச் சங்கடத்தை யெல்லாம் பார்த்து விட்டோ என்னமோ, அந்தக் காலணா நோட்டு வழக்கம் இருந்த இடம் தெரியாமல் எப்படியோ மறைந்து விட்டது!

ஆகக்கூடி, இப்பொழுது உன்னால் எங்களுக்கு மேல் வரும்படிக்குக் குறைவே இல்லை. இதனால் உன்னைச் சிருஷ்டி செய்த அந்த யுத்தம் எப்பொழுதுமே நடந்துகொண்டிருந்தால் கூடத் தேவலை போலிருக்கிறது!

இப்படிக்கு,

பஸ், டிராம் கண்டக்டர்கள்.

காலக்ஷேபம்

கழித்தல் கணக்கு!

ஒரு பாங்கி பியூன் மணி எட்டு அடிப்பதற்குப் பதிலாகப் பத்து அடித்தான்.



அப்பொழுது பணம் கட்ட வந்த ஒருவர் அவனைப் பார்த்து, "மணி எட்டுத்தானே ஆகிறது! நீ ஏன் பத்து அடித்தாய்?" என்று கேட்டார்.

பியூன் :—சாமி! ஞாபக மறதியாய் எட்டுக்கு ஒன்பது அடிச்சுட்டேன். அதைக் கழிப்பதற்காக இன்னும் ஒண்ணு அடிச்சேன்!

—ஆர். எஸ். பாணி.

○

தீராத கஷ்டம்!

கோபு :—இந்தாடா ராமு! நான் உனக்குக் கொடுக்க வேண்டிய பத்து ரூபாய்.

ராமு (ஆச்சரியத்துடன்) :—ஏதடா பணம்?

கோபு :—அதை ஏன் கேட்கிறாய்? எனக்குக் கடன் கொடுத்துவிட்டு ஒரு வருஷமாக நீ படும் கஷ்டத்தைக் கண்ட என் மனைவி பரிதாபப்பட்டு, உன் மனைவியிடமிருந்து பத்து ரூபாய் கடன் வாங்கிக் கொடுத்தாள்!

—எஸ். பி. மாதையன்.

○

கடைசி வார்த்தை!



"....அப்போ நான் போய் வரட்டுமா? கடைசியாக நீ சொல்கிற வார்த்தை இல்லை என்பது தானே?"

"ஆமாம்!"

—கா. கி.

வித்தியாசம்

பையன் :—அப்பா! ஒரு வீசை வெங்காயம் ரொம்ப இருக்குமோ?



தகப்பனார் (மளிகைக் கடைக்காரர்) :—நீ அதை விற்கிறாயா, அல்லது வாங்குகிறாயா என்பதைப் பொறுத்திருக்கிறது!

—என். வி. ஆர். சுவாமி.

○

வேண்டாம்!

பக்தர் (சிற்றாளிடம்) :—ஏய்! இந்தப் பவுனை உலையில் போட்டு, இருபத்தைந்து வரை எண்ணிய பிறகு, எடு!

சிற்றாள் (தெத்துவாயன்) :—இ-இ-இ-இந்தப் ப-ப-ப-பவுனை உ-உ-உ-உலையில் போ-போ-போ-போட்டு. இ-இ-இ-இருபத்தைந்து எ-எ-எ-எண்ணிய பி-பி-பி-பிறகு, எ-எ-எ-எடுத்து வி-வி-வி-விடவா?

பக்தர் :—வேண்டாம்! வேண்டாம்!! நீ ஐந்து வரை எண்ணி எடுத்துவிட்டால் போதும்!

—உ. கல்யாணசுந்தரம்.

○

ஏமாற்றியவர்

"இங்கேயிருந்து அடுத்த ஊருக்குத் தினம் நான் டிக்கெட் வாங்காமலேயே போகிறேன்!" என்று ஒருவர் ரயில்வே அதிகாரி ஒருவரிடம் பெருமையடித்துக் கொண்டார்.




"சரி, அப்படின்னா நீ ரொம்ப நாளா ரயில்வேக் காரனை ஏமாத்தறேன்னு சொல்லு!"

"அதெல்லாம் ஒண்ணுமில்லை! தினம் நடந்து தானே போகிறேன்!"


—கா. ப. மணியன்.

வண்டியில் கட்டப்பட்டிருந்த பூனைகள் திடீரென்று நாலு கால் பாய்ச்சலில் கிளம்பின. பூனை ராஜா என்ன அடக்கியும் வண்டியை நிறுத்த முடியவில்லை. பூனைகள் இரண்டும் ஓடியதற்குக் காரணம் ஒரு சுண்டெலிதான்.



அந்த ஊர் பூனைகள் நிறைந்த ஊர் ஆனதால் ஒரு எலியாவது பயந்து கொண்டு வெளியே வருவதில்லை. அரண்மனையில் வெகு நாட்களாக உபயோகப்படாமலிருந்த அந்த ரதத்தில் ஒரு சுண்டெலி ஒளிந்து கொண்டிருந்தது. இப்பொழுது வண்டி ஓடும் சத்தத்தைக் கேட்டுப் பயந்து போய்த் தப்பி ஓட வெளியே குதித்தது. வெகு நாட்களாக எலிகளையே பார்க்காமலிருந்த பூனைகள், சுண்டெலியைப் பார்த்தவுடன் அதைத் துரத்திக் கொண்டு ஓடின. பயந்த சுண்டெலியைப் பின்பற்றி வண்டியில் கட்டியிருந்த பூனைகள் வெகு வேகமாக ஓடின. ராஜாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. ராணி வேறு மூர்ச்சையாகி வண்டியில் பரிதாபமாய்ச் சாய்ந்து கிடந்தது. வண்டியிலிருந்து ராணியைத் தூக்கிக் கொண்டு குதிப்பதற்குத் தைரியம் இல்லாமல் ராஜா தவியாய்த் தவித்தது.

சுண்டெலி கடைசியில் ஆற்றங் கரையிலிருந்த வளை ஒன்றில் புகுந்து தப்பிக் கொண்டது. ஆனால் பூனைகளோ சுண்டெலியைத் துரத்திக் கொண்டு, வண்டியுடன் ஆற்றங்கரையின்மீது ஏறவே, வண்டி தடால் என்று ஆற்று ஜலத்தில் விழுந்தது.



பூனை ராஜாவும் பூனை ராணியும்கூட ஆற்றில் 'தொப்' பென்று விழுந்தன. மூர்ச்சையடைந்திருந்த பூனை ராணியின் முகத்தில் தண்ணீர் பட்டதும் அது மயக்கம் தெளிந்து நீந்த ஆரம்பித்தது. அதைக் கண்ட பூனை ராஜா, "ஆற்றில் விழுந்தது கூட ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. இல்லாவிட்டால் இவ்வளவு சீக்கிரம் உனக்கு மயக்கம் தெளிந்திருக்குமா?" என்று கூறி ஆனந்தப்பட்டது. பூனை ராஜாவும் ராணியுமாக நீந்திக் கரைக்கு வந்து சேர்ந்தன. ராணிக்கு கோபம் கோபமாக வந்தது. அது அப்பொழுது ராஜாவை ஆத்திரத்துடன் பார்த்தது.

"போதும், போதும்! உங்கள் ஊர்வலமோ, லட்சணமோ! நாக்கைப் பிடுங்கிக் கொண்டு பிராணனை விடலாம் போலிருக்கிறது எனக்கு" என்றது ராணி.

"அப்படியானால் இவ்வளவு அவசரமாக நீந்தி வருவானேன்?" என்று சொல்லி ராஜா சிரித்தது.

பூனை ராஜாவும் ராணியும் அரண்மனை வந்து சேர்ந்தன. ஆனால் மேற்படி சம்பவம் நடந்த பிறகு, பூனை ராணி அரண்மனையை விட்டு வெளியே கிளம்புவதே இல்லை.



ஸா...ஸா...ஸா சமையல் சங்கீதம் ஆரம்பமாகிவிட்டது

நமது சமையலறைகளின் இருளும், நிசப்தமும் ஒழிந்தன. காமதேனு வந்தது; பொரியலும் சமையலும் பரபரவென்று நடக்கின்றன. ஆகா! என்ன ருசியான லட்டு, ஜாங்கிரி, பேணி, உப்புமா, சொஜ்ஜி பஜ்ஜி! வாருங்கள் வேண்டியமட்டும் சாப்பிடலாம்! கசிவற்ற, மணமற்ற பொரியல் சாதனமான காமதேனு சமையலுக்கு மிகச்சிறந்தது. ஆரோக்யமளிக்கும் வைடமின்கள் மிகுந்தது. உயர்தர நெய்யைப் போன்று மணல் மணலாக உள்ள காமதேனு பரிசுத்தமானது, கைபடாதது. 4 காலன், 10 பவுண்டு, 5 பவுண்டு கொண்ட சீல் வைத்த டின்களில் விற்கப்படுகிறது. காமதேனுவை உபயோகிப்பதால் சிக்கனமும் உண்டு; நெய், வெண்ணெயைப் போன்ற குணமுள்ளதாயினும் விலையில் மட்டும் மலிவு.



சிறந்த சமையற்காரர்கள்
வேண்டுவது

காமதேனு

வனஸ்பதி



தயாரிப்பவர்கள் :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்.

மேட்டூர்டாம் — தென்னிந்தியா

மானேஜிங் ஏஜன்டுகள் :
சேஷசாயி பிரதர்ஸ் லிட்.,
திருச்சிராப்பள்ளி.

சோல் விற்பனை ஏஜன்டுகள் :
அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபியூடர்ஸ்
லிட்., 120, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.



பூனை ராணி

ராஜி



பூனை ராஜாவும் பூனை ராணியும் நகரத்தை ஊர்வலமாக வர ஒரு நாள் தீர்மானித்தன. அதற்காக வெகு நாட்கள் உபயோகப்படுத்தாமலிருந்த ஒரு பூனை வண்டியை அவை உபயோகப்படுத்த எண்ணின. பூனை ராணி அணிவதற்கு நகைகளே இல்லாமலிருந்ததால் நல்ல கறுப்பு நாவற்பழங்களை நாரில்கோத்துக் கழுத்தில் இரண்டு வரிசையாகக் கட்டிக்கொண்டது. கறுப்பு வர்ணத்திற்கு ஏற்றாற்போல் அந்த இரண்டு வரிசைகளுக்கு நடுவே மஞ்சள் நிறமுள்ள வேப்பம்பழங்களைக் கோத்துக் கட்டிக்கொண்டது. அம் மூன்று மாலைகளும் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தன. பூனை ராஜாவே பூனை ராணியின் அழகைப் பார்த்துச் சந்தோஷப்பட்டது.

குறிப்பிட்ட நேரத்தில் பூனை ராஜாவும் பூனை ராணியும் தயாராக வெளியில் காத்திருந்த வண்டியில் ஏறிக் கொண்டன. அந்த வண்டியில் பூட்டப்பட்டிருந்த இரண்டு பூனைகள் மெதுவாக வண்டியை இழுத்துக் கொண்டு போயின. வண்டிக்குப் பின்னால் அரண்மனை மந்திரிகளும் வேலையாட்களும் மற்ற ஜனங்களும் வந்து கொண்டிருந்தார்கள்.

"பூனை ராஜாவுக்கு ஜே! பூனை ராணிக்கு ஜே!" என்று ஜய கோஷங்கள் கிளம்பின. பூனை ராஜா அதைக் கேட்டுச் சந்தோஷத்துடன் ராணியைப் பார்த்தார். ராணியும் வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டது.

வீதியில் வண்டி வந்து கொண்டிருக்கும் பொழுது, தைரியமாக ஒரு காகம் பூனை ராணியின் கழுத்தின்மீது பாய்ந்தது. அதனால் பூனை ராணி மூர்ச்சை அடைந்தது. பூனை ராஜா, "அபாயம்! அபாயம்!" என்று கத்திற்று. ஆனால் அந்தக் காகம் பூனை ராணியை ஒன்றும் செய்யவில்லை. அதன் கழுத்தில் கட்டியிருந்த வேப்பம் பழ மாலையை மட்டும் வாயில் கௌவிக் கொண்டு ஒருவர் கையிலும் அகப்படாமல் பறந்து சென்றது.

ராஜா வண்டியின் லகானைப்பிடித்து இழுத்துக் கொண்டே, அருகிலிருந்த வேலையாளைப் பார்த்து, "போ சீக்கிரம்! ஒரு சொம்பில் ஜலமும் விசிறியும் உடனே கொண்டு வா" என்று கட்டளையிட்டார். வேலையாளும் ஜலம் கொண்டுவர அருகிலிருந்த வீட்டுக்குள் ஓடிற்று.



ராஜா லகானைப் பிடித்து இழுத்த போதிலும் வண்டி நிற்கவில்லை.

"நாகநந்தி கொடுத்திருக்கும் ஓலை எங்கே? அதை நான் பார்க்கலாமா?" என்று பிக்ஷு கேட்டார்.

"இல்லை, சுவாமி! மன்னிக்க வேண்டும். ஓலையைச் சத்தியாச்ரயரைத் தவிர வேறு யாரிடமும் கொடுக்கக் கூடாதென்று நாகநந்தியடிகளின் கட்டளை."

சத்தியாச்ரயர் என்ற பெயரைக் கேட்டதும் பிக்ஷுவின் முகத்தில் ஒரு மர்மமான புன்னகை தோன்றியது. அதைப் பரஞ்சோதி கவனித்தானாயினும் அதன் பொருள் இன்னதென்று அவனுக்குத் தெரியவில்லை.

"அப்படியே யாகட்டும், நாகநந்தியடிகள் என்ன கட்டளையிட்டாரோ, அவ்விதமே செய். இன்றிரவு இங்கேயே படுத்துக்கொள். ஸ்ரீ பர்வதத்துக்குப் போகும் வழியெல்லாம் இப்போது அபாயம் நிறைந்ததாயிருக்கிறது. இன்று ராத்திரியே அவ்விடத்துக்குப் போகும் வீரர்கள் சிலர் இங்கே வரக்கூடும். அவர்களுடன் சேர்த்து அனுப்பி வைக்கிறேன். அவர்கள் உனக்கு வழி காட்டுவதுடன் பத்திரமாகவும் கொண்டு போய்ச் சேர்ப்பார்கள்!" என்று ஆச்சாரிய பிக்ஷு கூறி, பரஞ்சோதியை அழைத்து வந்த பிக்ஷுவைப் பார்த்து, பாலி பாஷையில் ஏதோ சொன்னார்.

அந்தப் பிக்ஷு பரஞ்சோதியை அங்கிருந்து அழைத்துச் சென்று உணவருந்தச் செய்த பிறகு, கீழ்வரிசை அறைகளில் ஓர் அறையில் அவன் படுத்துக் கொள்வதற்கு இடம் காட்டினார். சென்ற இரவில் நல்ல தூக்கம் இல்லாமையாலும் நெடுந் தூரப் பிரயாணத்தினாலும் களைப்புற்றிருந்த பரஞ்சோதி இன்று படுத்தவுடன் நிம்மதியாகத் தூங்கலானான்.

தோளைப் பிடித்து யாரோ குலுக்குவதறிந்து பரஞ்சோதி திடுக்கிட்டுக் கண் விழித்தான். முதல் நாள் அவனை மடத்துக்குள் அழைத்து வந்த பிக்ஷுதான் அவனை எழுப்பிக் கொண்டிருந்தார். பக்கத்தில் பெரிய பிக்ஷுவும் நின்றார்.

"தம்பி! நாகார்ஜுன பர்வதத்துக்குப் போகும் மனிதர்கள் புறப்படுகிறார்கள். நீயும் கிளம்பு!" என்றார் பெரிய பிக்ஷு.

பரஞ்சோதி அவசரமாக எழுந்து தலைமாட்டில் வைத்திருந்த ஓலைக் குழாயை எடுத்து இடுப்பில் செருகிக் கொண்டான். பிக்ஷுக்களைப் பின் தொடர்ந்து மடத்தின் வாசலுக்கு வந்தான்.

அங்கே அவனுடைய குதிரையைத் தவிர இன்னும் ஆறு குதிரைகளும், ஒவ்வொரு குதிரைக்கும் அருகில் ஆஜானுபாகுவான வீரன் ஒருவனும் நிற்பதைக் கீழ் வானத்தில் தோன்றிய பாதி மதியின் மங்கிய நிலவொளியில் பரஞ்சோதி கண்டான். அவனுடைய நெஞ்சில் காரணம் தெரியாத ஒரு வகைத் துணுக்கம் ஏற்பட்டது.

"இந்த வீரர்கள் அவசர காரியமாக ஸ்ரீ பர்வதத்துக்குப் போகிறார்கள். இவர்களுடன் போனால் உனக்கு அபாயம் ஒன்றும் நேராது. குறுக்கு வழியாக வெகு சீக்கிரம் போய்ச் சேர்ந்து விடலாம்" என்று பெரிய பிக்ஷு கூறினார்.

மனத்தில் தயக்கத்துடன் பரஞ்சோதி குதிரை மீது ஏறினான். குதிரைகள் எல்லாம் வடபெண்ணை நதிக் கரையோடு மேற்குத் திசையை நோக்கிச் சென்றன.



அத்தியாயம் 40

கட்டாயப் பிரயாணம்

மகேந்திர விடுதியிலிருந்து அதிகாலையில் கிளம்பிய பரஞ்சோதி, அன்று பகலெல்லாம் பிரயாணம் செய்து, வட பெண்ணையுடன் பாபாக்கினி நதி கலக்கும் இடத்திலுள்ள புத்த விஹாரத்தைச் சூரியாஸ்தமன நேரத்தில் அடைந்தான்.

விஹாரத்தின் வாசலில் புத்தபிக்ஷு ஒருவர் நின்று கொண்டிருந்தார். மாலை நிறத்து மஞ்சள் வெய்யிலில் பிக்ஷுவின் காவி உடையானது தங்க நிறமாகப் பிரகாசித்தது. பரஞ்சோதி குதிரையிலிருந்து இறங்கி பிக்ஷுவை அணுகியதும், அவர் இவனை என்னவோ கேட்டார். அவர் பேசிய பாஷை பரஞ்சோதிக்குப் புரியவில்லை. ஆனாலும் தான் யார் என்பதைத்தான் அவர் விசாரிக்கிறார் என்று ஊகித்துக் கொண்டு, தமிழிலேயே, தான் நாகார்ஜுன பர்வதத்துக்குப் போவதாகவும், தன்னை இவ்விடம் தங்கி வழி கேட்டுக் கொண்டு போகும்படி நாகநந்தியடிகள் பணித்தார் என்றும் கூறினான்.

நாகநந்தி என்று கேட்டதும் அந்த பிக்ஷுவின் முகத்தில் மாறுதல் காணப்பட்டது. சமிக்ஞையினால் "கொஞ்சம் இங்கேயே இரு!" என்று பரஞ்சோதிக்குச் சொல்லி விட்டு, பிக்ஷு உள்ளே சென்றார். சற்று நேரத்துக்கெல்லாம் அவர் திரும்பி வந்து பரஞ்சோதியையும் விஹாரத்துக்குள் அழைத்துச் சென்றார். அந்தப் பௌத்த விஹாரமானது காஞ்சியில் தான் பார்த்த இராஜ விஹாரத்தைப் போல் கல், மரம், சுண்ணாம்பினால் கட்டப்பட்டதல்ல வென்பதையும், குன்றிலே குடைந்து அமைக்கப்பட்ட தென்பதையும் பரஞ்சோதி கவனித்தான். காஞ்சி இராஜ விஹாரத்தைப்போல் இது அவ்வளவு பெரிதாக இல்லை; அவ்வளவு விலையுயர்ந்த சாமக்கிரியைகளும் பூஜைப் பொருள்களும் இங்கே காணப்படவில்லை. ஆனால் விஹாரத்தின் அமைப்பு முறை அதே மாதிரி இருந்தது. நடுவில் பிக்ஷுக்கள் கூடிப் பிரார்த்தனையும் தியானமும் செய்வதற்குரிய சைத்யமும், அதன் பின்பக்கச் சுவரில் பிரம்மாண்டமான புத்தர் சிலையும் இருந்தன. அந்த புத்தர் சிலையும், சிலைக்கு மேலே கவிந்திருந்த போதி விருட்சமும், புத்தர்மீது புஷ்ப மாரி பொழிந்து கொண்டிருந்த கந்தர்வர்களும் — எல்லாம் ஒரே பாறையில் குடைந்து அமைக்கப்பட்டிருந்தன. அலங்கார தீபங்கள் வரிசை வரிசையாக ஒளிர்ந்தன. புத்த பகவானுக்கு எதிரில் பலவித வர்ணங்களையுடைய புஷ்பங்கள் தனித்தனிக் கும்பலாகக் குவிக்கப்பட்டுக் கண்ணைக் கவரும் காட்சியளித்தன. புஷ்பங்களின் நறுமணத்துடன் அகிற்புகையின் வாசனையும் சேர்ந்து சிந்தையை ஒருமுகப்படுத்த உதவி செய்தன.

சைத்யத்துக்கு இரு புறத்திலும் புத்த பிக்ஷுக்கள் தங்குவதற்கும் மாணாக்கர்கள் கல்வி பயில்வதற்கும் ஆன குகை அறைகள் குடையப்பட்டிருந்தன. ஒரு பக்கத்து அறைகளின் கோடியில் மச்சுப்படிகள் போன்ற படிக்கட்டு காணப்பட்டது. அந்தப் படிகளின் வழியாகப் பரஞ்சோதி அழைத்துச் செல்லப் பட்டான். மேற் படியை அடைந்தபோது, கீழேயுள்ள அறைகளைப்போல் மேலேயும் அறைகள் குடையப்பட்டிருந்தன என்று தெரிந்தது. அவற்றில் விசாலமான அறை ஒன்றில் பத்மாசனமிட்டு அமர்ந்திருந்த பிக்ஷுவிடம் பரஞ்சோதி அழைத்துச் சென்று விடப்பட்டான்.

அந்த விஹாரத்தின் தலைமைப் பிக்ஷு அவர்தான் என்பதைப் பரஞ்சோதி ஊகித்து அவரைக் கை கூப்பி வணங்கினான். "புத்தம் கச்சாமி" "தர்மம் கச்சாமி" "சங்கம் கச்சாமி" என்று அந்தப் பிக்ஷு கூறி மூன்று முறை புத்த பகவானுக்கு வணக்கம் செலுத்தி விட்டு, பரஞ்சோதியைப் பார்த்துத் தமிழ் பாஷையில், "குழந்தாய்! நீ யார்? என்ன காரியமாக வந்தாய்? யார் உன்னை அனுப்பினார்கள்?" என்று கேட்டார்.

பரஞ்சோதி நாகநந்தியடிகள் சொல்லச் சொல்லியிருந்தபடி விவரமாகக் கூறினான்.

கூறி, சிவகாமி கலகலவென்று சிரிக்கத் தொடங்கினாள்.

வாசல் திண்ணையில், மனதிலே பெரும் பாரத்துடன் தூக்கம் வராமல் படுத்திருந்த ஆயனர், "குழந்தைகளே! இன்னும் தூங்க வில்லையா நீங்கள்? மூன்றாம் ஜாமம் முடியப்போகிறதே!" என்றார்.

* * *

இரவு நாலாவது ஜாமத்தில், விழிப்புமில்லாமல் நித்திரையுமில்லாமல் அரைத் தூக்க நிலையில் சிவகாமி படுக்கையில் புரண்டுகொண்டிருந்த போது, முன் ஜாமத்தில் அவள் மனக் கண்முன் தோன்றிய நிழல் தோற்றங்கள் சிறிது சிறிதாக உருவம் எடுக்க ஆரம்பித்தன.

ஒரு செண்பக மரத்தின் கிளையில் இரண்டு புறாக்கள் உட்கார்ந்து ஒன்றோடொன்று கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்கின்றன. திடீரென்று சுற்றியிருந்த மரங்கள் எல்லாம் தீப்பட்டு எரியத் தொடங்குகின்றன. ஆண் புறுவானது பெண் புறுவைப் பார்த்து, "நீ இங்கேயே இரு; நான் திரும்பி வந்து உன்னைக் காப்பாற்றுகிறேன்!" என்று சொல்லி விட்டுப் பறந்து செல்கிறது. அது போன வழியையே பெண் புறு பார்த்துக் கொண்டிருக்கிறது. தீயோ நாலு புறமும் நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. ஆண் புறு திரும்பி வருமா? வந்து, பெண் புறுவைத் தப்புவிக்குமா?—இது தெரியாதபடி பெண் புறுவை நாலா புறமும் புகை வந்து சூழ்ந்து விடுகிறது. அந்தக் கணத்தில் அவ்விதம் புகையினால் சூழப்பட்டிருப்பது பெண் புறு அல்ல,—தானே என்று சிவகாமி பிரமை யுறுகிறாள்.

கற்பனை உலகக் காட்சி மாறுகிறது. மல்லிகைத் தோட்டத்தில் ஆணும் பெண்ணுமான ஒரு கலை மானும் ஒரு புள்ளி மானும் துள்ளி விளையாடிக் கொண்டிருக்கின்றன. விளையாட்டின் இடையே புள்ளி மானானது மல்லிகைப் புதருக்கு அருகில் மறைந்து நிற்கிறது. மல்லிகைப் புதரில் பூத்துச் சிரித்திருந்த வெள்ளி மலர்களுக்கும், புள்ளி மானின்மீது அள்ளித் தெளித்திருந்த வெள்ளிப் பொட்டுக்களுக்கும் வித்தியாசம் தெரியாமல் கலைமான் புள்ளி மானைத் தாண்டிக்கொண்டு அப்பால் போகிறது. அதைக் கண்டு புள்ளி மான் சிரிக்கிறது. இப்படி அவை விளையாடிக் கொண்டிருக்கையில், ஒரு தடவை புள்ளி மான் ஒளிந்துகொண்டிருந்தபோது சற்றுத் தூரத்தில் ஒரு மல்லிகைப் புதரில் இரண்டு பிரகாசமான நட்சத்திரங்கள் ஜொலிப்பதைக் கண்டு அதிசயித்தது. பிறகு, அவை நட்சத்திரங்கள் அல்ல,—அனல் கட்டிகள் என்று தோன்றியது. பின்னர், அந்த இரண்டு அனல் கட்டிகளும் ஒரு பெரிய புலியின் இரண்டு கண்கள்தான் என்று தெரியவே, புள்ளிமானின் சகல நாடியும் ஒடுங்கி விட்டது. "அபாயம்!" என்று கூவி, கலைமானை அழைக்க அது முயன்றது. ஆனால், அதன் தொண்டையிலிருந்து சத்தமே உண்டாகவில்லை.

அவ்வளவுதான்; மேலே என்ன ஆயிற்று? புள்ளிமான் தப்பித்துச் சென்றதா? கலைமானுடன் சேர்ந்ததா?—தெரியவில்லை. அத்தகைய பயங்கர அபாயத்தில் அகப்பட்டுக் கொண்டிருந்த பிணைமான் உண்மையில் மான் அல்ல,—தானே என்று மட்டும் அவளுக்கு அந்தக் கணத்தில் தெரியவந்தது.



மாதிரி உன் தங்கையை இப்போது மாமல்லர் பார்க்கிறார், கமலி!''

"இவ்வளவுதானா?"

"இன்னும் என்ன வேண்டும்? நாவுக்கரசர் மடத்தில் அபிநயம் பிடித்தானதும் சிவகாமி மூர்ச்சையாகி விழுந்து விட்டாள் என்று சொன்னேனல்லவா? அப்போது மாமல்லர் ஓடி வந்து சிவகாமியைத் தூக்கி ஆயனர் மடியின் மீது வைத்தார். கமலி! அப்போது அவருடைய கைகளும் தேகமும் எப்படிப் பதறின தெரியுமா? அவருடைய முகம் எப்படியிருந்தது தெரியுமா? இதுவரையில் எனக்குக் கொஞ்சம் சந்தேகமாயிருந்தது, கமலி! இன்றைக்குத்தான் நிச்சயமாயிற்று."

இதைக் கேட்டுக் கொண்டிருந்த சிவகாமியின் தேகமெல்லாம் சிலிர்த்தது. அவளுக்கு விம்மலுடன் அழுகை வரும் போலிருந்தது. இருந்தாலும், சமாளித்துக் கொண்டு மேலும் நடந்த சம்பாஷணையைக் கேட்டாள்.

"இவ்வளவு கூர்மையாய்க் கவனித்தாயே, அந்த வரையில் நீயும் புத்திசாலிதான்; மாமல்லரும் பாக்கியசாலிதான்!" என்றாள் கமலி.

"மாமல்லர் பாக்கியசாலி என்று சொல்கிறாய்? இதனால் ஏற்படப் போகிற சங்கடங்களையெல்லாம் நினைத்தால்..."

"சங்கடம் என்ன வந்தது?"

"குமார சக்கரவர்த்தியின் கல்யாணம் என்றால், நம்முடைய கல்யாணத்தைப் போல் என்று நினைத்துக்கொண்டாயா, கமலி! எத்தனை எத்தனையோ யோசனை செய்வார்கள்..."

"கண்ணா! என் தங்கையை மட்டும் சாமானியமான பெண் என்று நினைத்தாய்? தமயந்தியை மணந்து கொள்ளத் தேவலோகத்திலிருந்து தேவர்கள் வந்ததுபோல் சிவகாமியைத் தேடியும் வரமாட்டார்களா? ஏதோ தமயந்தி மனது வைத்து நளமகாராஜனுக்கு மாலையிட்டாள்......"

"தமயந்தி அரண்மனையில் பிறந்த ராஜகுமாரியாச்சே, கமலி! உன் தங்கை......"

"என் தங்கை ஆயிரம் ராஜகுமாரிக்கு இணையானவள், கண்ணா! நீ வேணுமானால் பார்! என்னுடைய மனோரதம் ஒரு நாள் கட்டாயம் நிறைவேறும்."

"அது என்ன மனோரதம், கமலி?"

"சொல்லட்டுமா? இந்த யுத்தமெல்லாம் முடிந்த பிறகு, மாமல்லருக்கு மகுடாபிஷேகம் நடக்கிறது. தங்க ரதத்தில், நவரத்ன சிங்காசனத்தில் அமர்ந்து நரசிம்ம சக்கரவர்த்தி இராஜவீதிகளில் பவனி வருகிறார். அவருக்குப் பக்கத்தில், மகா விஷ்ணுவுக்குப் பக்கத்தில் மகாலக்ஷ்மியைப் போலவும், தேவேந்திரனுக்கு அருகில் இந்திராணியைப் போலவும் என் தங்கை சிவகாமி அமர்ந்திருக்கிறாள். ரதத்தின் முன் தட்டில் நீ என்று உட்கார்ந்து நீதான் ரதத்தை ஓட்டிக் கொண்டு வருகிறாய். நான் அரண்மனைக் கோபுர வாசலில் மேல் மாடத்தில் நின்று கொண்டிருக்கிறேன். ரதம் வந்து அரண்மனை வாசலில் நின்றதும் கூடை கூடையாக மல்லிகை மலர்களையும் செண்பகப் பூக்களையும் எடுத்தெடுத்து அவர்கள் மேல் கொட்டுகிறேன். நடுவில் உன் தலையிலும் ஒரு கூடைப் பூவைக் கவிழ்க்கிறேன். — இதுதான் என் மனோரதம், கண்ணா!"

"கமலி! உன் மனோரதம் நிறைவேறினால் எனக்கும் அளவில்லாத சந்தோஷந்தான்" என்றான் கண்ணன்.

அதற்கு மேல் அங்கே நிற்க முடியாமல் சிவகாமி திரும்பிச் சென்று மறுபடியும் தன்னுடைய அறைக்குள்ளே சென்று படுக்கையில் படுத்துக்கொண்டாள். இருதயத்தின் அடிவாரத்திலிருந்து பொங்கி வந்த விம்மலையும் அழுகையையும் ஆனமட்டும் முயன்றும் அவளால் அடக்கிக் கொள்ள முடியவில்லை.

சற்று நேரத்துக்கெல்லாம் பக்கத்து அறைக் கதவு திறக்கும் சத்தம் கேட்டது. கமலி மெதுவாக நடந்து வந்து சிவகாமியின் பக்கத்தில் உட்கார்ந்து அவளை அன்புடன் தழுவிக் கொண்டு, "என் கண்ணே! இது என்ன? ஏன் அழுகிறாய்? ஏதாவது கனவு கண்டாயா?" என்று கனிந்த குரலில் கேட்டாள்.

"இல்லை, அக்கா, இல்லை! நான் அழவில்லை; சிரிக்கிறேன்!" என்று

ராஜ்யத்தின் குமார சக்கரவர்த்தி. வீரத்தில் அர்ஜுனனையும் அழகில் மன்மதனையும் அறிவில் பிரகஸ்பதியையும் ஒத்தவரான மாமல்ல நரசிம்மர். — உன்னுடைய தங்கச்சி சிவகாமியின் மேல் காதல் கொண்டிருக்கிறார், கமலி!"

"ஆ!" என்னும் சத்தம் மட்டுந்தான் கமலியின் வாயிலிருந்து வந்தது. உண்மையிலேயே அவள் ஆச்சரியத்தினால் திகைத்து விட்டாள் என்று அந்தச் சத்தத்திலிருந்து புலனாயிற்று.

வெளியிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த சிவகாமியின் நெஞ்சில், அந்த 'ஆ!' சத்தமானது கூரிய அம்பைப் போல் புகுந்தது. தன்னிடம் இவ்வளவு ஆசையும் நம்பிக்கையும் வைத்துள்ள அருமைத் தோழியிடம் தனது அந்தரங்கத்தை வெளியிடாமல் இத்தனை நாளும் ஒளித்து வைத்திருந்தது பற்றி அவள் வெட்கினாள்.

சம்பாஷணை மேலும் தொடர்ந்தது.

"கமலி! உனக்கு அதிசயமாயிருக்கிறதல்லவா?"

"அதிசயம் என்ன? நம்முடைய குமார சக்கரவர்த்தி புத்திசாலி என்றுதான் அடிக்கடி சொல்லியிருக்கிறேனே? அதனால்தான் அவருக்கு என் தங்கச்சியின் மேல் மனம் சென்றது. இதில் அதிசயம் என்ன வந்தது?" என்று கமலி சமத்காரமாய்ச் சொன்னாள்.

"அதை நான் கேட்கவில்லை. உன் தங்கையைப்போல் ஈரேழு பதினாலு உலகத்திலும் இடையாது என்றுதான் தெரியுமே? ஆனால் இந்த விஷயம் உனக்கு முன்னமே தெரியாதல்லவா?" என்று கேட்டான் கண்ணபிரான்.

"என் தங்கச்சி விஷயம் எனக்குத் தெரியாமலிருக்குமா?" என்றாள் கமலி.

"அப்படியானால், நான் சொன்னவுடன் ஏன் அவ்வளவு ஆச்சரியப்பட்டாய்?"

"அந்த இரகசியம் உனக்கு எப்படித் தெரிந்தது என்றுதான் ஆச்சரியப்பட்டேன்."

"ஓஹோ! அப்படியா? நீயும் உன் தங்கையும் சேர்ந்து பேசிக் கொண்டு தான் இந்த வேலை செய்தீர்கள் போலிருக்கிறது! உன்னுடைய வலையில் என்னை நீ போட்டுக் கொண்டாய்! உன் தங்கச்சி குமார சக்கரவர்த்தியையே வலை போட்டுப் பிடித்து விட்டாள்!"

"என்ன சொன்னாய்?" என்று கமலி கம்பீரமாய்க் கேட்டு விட்டு மேலும் சொல்லம்புகளைப் போட்டாள்:—

"நானா உன்னைத் தேடி வந்து என்னுடைய வலையில் போட்டுக் கொண்டேன்? நானா வீட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் உன்னைத் தொடர்ந்து வந்து கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, 'கண்ணே! மூக்கே! நீ கருணை செய்யாவிட்டால் நான் உயிரை விடுவேன்!' என்று கதறினேன்? நானா உன் காலில் விழுந்து 'என்னைக் கல்யாணம் செய்து கொள்' என்று கெஞ்சினேன்?..."

"இல்லை, கமலி, இல்லை. நீ உன்னுடைய கண்ணாகிற வலையை வெறுமனே விளையாட்டுக்காக விரித்தாய்! அதிலே நானாக ஓடிவந்துதான் அகப்பட்டுக் கொண்டேன்!"

"மறுபடியும் அப்படியா சொல்கிறாய்? இதோ என் பிறந்த வீட்டுக்குப் போய்விடுகிறேன், பார்!" என்று கமலி எழுந்து நின்றாள்.

"இல்லை, இல்லை! தப்பு! தப்பு!"

"ஆமாம், தப்புத்தான்! இந்த அவலட்சணத்தினிடம் நீ காதல் கொண்டது, கல்யாணம் செய்து கொண்டது எல்லாம் தப்புத்தான்! இப்போதாவது தெரிந்து கொண்டாயா?"

"இல்லை, கமலி! இல்லை. நான் சொன்னது தப்பு என்றேன்."

"அப்படி வா வழிக்கு!" என்று கூறிக் கமலி உட்கார்ந்தாள். "நம்முடைய கதை இருக்கட்டும். மாமல்லருக்கும் என் தங்கைக்கும் இந்த மாதிரி என்று உனக்கு எப்படித் தெரிந்தது? அதைச் சொல்லு!" என்றாள்.

"ஆ! பாம்பின் கால் பாம்புக்குத் தெரியாதா, கமலி! கள்ளனுக்குத் தெரியாதா கள்ளனின் சமாசாரம்? நான் உன்னை உன் தகப்பனார் வீட்டில் அந்தக் காலத்தில் என்னமாய்ப் பார்த்தேன், ஞாபகம் இருக்கிறதா? அம்

ருக்கும் பின்னைக்கும் சண்டை ஆரம்பமாகி விட்டது!...''

"சண்டையா! எதற்காக?"

"குமார சக்கரவர்த்தியிடம் 'கல்யாணம்' என்று யாராவது சொன்னாலே, அவருக்குப் பிரமாதமான கோபம்வந்து விடுகிறது. 'இதற்குத்தானா இவ்வளவு அவசரமாகக் கூப்பிட்டு அனுப்பினீர்கள்? போர்க்களத்திலிருந்துதான் ஏதோ செய்தி வந்திருக்கிறதாக்கும் என்று நினைத்தல்லவா ஓடி வந்தேன்?' என்று அவர் மகாராணியிடம் கோபமாகப் பேசினார்... கமலி! உனக்கு ஒரு இரகசியம் சொல்லட்டுமா?" என்று கண்ணன் கேட்டபோது, அவனுடைய குரல் சிறிது தாழ்ந்தது.

சிவகாமியின் நெஞ்சு அப்போது திக், திக் என்று அடித்துக் கொண்டது.

"வேண்டாம்!" என்று கமலி மறுமொழி கூறியது காதில் விழுந்ததும் சிவகாமிக்குத் தன் தோழியின் பேரில் கோபமே உண்டாயிற்று.

"ஏன் வேண்டாம் என்கிறாய், கமலி! மிகவும் முக்கியமான இரகசியம். கேட்டால் பிரமித்துப் போவாய்!" என்றான் கண்ணன்.

"பெண் பிள்ளைகளிடம் இரகசியம் சொல்லக்கூடாது என்று உனக்குத் தெரியாதா, கண்ணா?" என்றாள் கமலி.

"ஓஹோ! நீ பெண் பிள்ளையா? மறந்து போய்விட்டேன்!" என்று கண்ணன் நகைத்துக் கொண்டே கூறினான்.

"ஆமாம்; நீ ஆண் பிள்ளை என்பதையும் மறந்து போய்விடுவாய்! யுத்தம் வருகிறதல்லவா?"

"யுத்தம் வரட்டும்; அப்போது தெரிகிறது, யார் ஆண் பிள்ளை, யார் பெண் பிள்ளையென்று! நீ என் காலில் விழுந்து 'கண்ணா! யுத்தத்துக்குப் போகாதே!' என்று கதறப் போகிறாய். நான் உன்னை உதைத்துத் தள்ளி விட்டுப் போர்க்களத்துக்குப் போகப் போகிறேன்..."

"அப்படியா நினைத்துக் கொண்டிருக்கிறாய் உன் மனதில்? யுத்தம் கிட்டி வரும்போது நீ போகாவிட்டால் நானே உன்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ள மாட்டேனா?... கலயாணத்திற்குப் பிறகு நீ இப்படிப் பயங்கொள்ளியாய்ப் போனதைப் பார்த்து விட்டுத்தான், குமார சக்கரவர்த்தி 'கல்யாணம்' என்றாலே எரிந்து விழுகிறார் போலிருக்கிறது!"

"இப்படித்தானே நீ எண்ணிக் கொண்டிருக்கிறாய்? ஆமாம்; யுத்தம் வந்திருக்கிறபடியால் குமார சக்கரவர்த்தி கல்யாணம் வேண்டாம் என்கிறார் என்றுதான் எல்லாரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிசகு, கமலி, பிசகு!"

"எது பிசகு, கண்ணா!"

"எல்லாரும் நினைத்துக் கொண்டிருப்பது பிசகு. மாமல்லர் கல்யாணப் பேச்சை வெறுப்பதற்கு வேறு காரணம் இருக்கிறது. அது பெரிய இரகசியம். என்னைத் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது!"

"அப்படியானால் என்னிடம் சொல்லு. இன்னும் எத்தனை பேருக்குச் சொல்ல வேண்டுமோ சொல்லி விடுகிறேன்."

"ஒருவரிடமும் சொல்லுவதில்லையென்று ஆணை வைத்தால்தான் சொல்வேன்."

"அப்படியானால் வேண்டாம்!"

"ஏன்?"

"என் தங்கச்சியிடம் சொல்லாமல் என்னால் எந்த இரகசியத்தையும் வைத்துக்கொள்ள முடியாது."


"இது உன் தங்கச்சியைப் பற்றிய இரகசியந்தான் கமலி!"

"என்ன? என்ன? என் தங்கச்சியைப் பற்றி எனக்குத் தெரியாத இரகசியம் என்ன இருக்கிறது? ஏதாவது இசை கேடாகச் சொன்னாயோ, பார்த்துக்கொள்! அப்புறம் உன் முகத்திலேயே விழிக்க மாட்டேன், ஜாக்கிரதை!"

"இசை கேடு ஒன்றுமில்லை, கமலி! பெருமையான விஷயந்தான்.— சொன்னால், எனக்கு என்ன தருகிறாய்?"

"சொல்லி விட்டுக் கேளு! பொருளைப் பார்த்து விட்டல்லவா விலையைத் தீர்மானிக்க வேண்டும்?" என்றாள் கமலி.

"அப்புறம் ஏமாற்றக் கூடாது. சொல்கிறேன், கேள்! பல்லவ சாம்



அத்தியாயம் 39

கமலியின் மனோரதம்

விவரிக்க முடியாத இன்பத்தையும் வேதனையையும் ஒருங்கே தந்த அத்தகைய நிழல் நினைவுகளைப் பொறுக்க முடியாமல், சிவகாமி சாளர மாடத்திலிருந்து எழுந்தாள். அந்த அறையின் பின்புறக் கதவை ஓசைப் படாமல் மெதுவாய்த் திறந்து கொண்டு பூந்தோட்டத்துக்குள் பிரவேசித்தாள். அப்போது இரவில் மூன்றாம் ஜாமம் நடந்து கொண்டிருந்தது. கீழ் வானத்தில் பிறைச் சந்திரன் கிளம்பிச் சற்று தூரம் மேலே வந்திருந்தான். அவன் விரித்த இளம் நிலவின் மோகன ஒளியில் அந்தப் பூந்தோட்டமே கனவு உலகத்தில் காணும் ஒரு காட்சி போல் தென்பட்டது.

பூந்தோட்டத்தில் உலாவி வர எண்ணிப் புறப்பட்ட சிவகாமி, வீட்டுச் சுவரோரமாகச் சற்றுத் தூரம் சென்றபோது, பேச்சுக் குரல் கேட்டுத் திடுக்கிட்டு நின்றாள். கமலியும் கண்ணபிரானும்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இருந்த அறையின் பின்புறப் பலகணி வழியாக அவர்கள் பேசுவது தெளிவாகக் கேட்டது. அந்தப் பக்கமாகப் போகக்கூடாது, திரும்பிவிட வேண்டுமென்று எண்ணிய சிவகாமியின் செவியில் "மாமல்லர்" "குமார சக்கரவர்த்தி" என்ற வார்த்தைகள் விழுந்தன. பிறகு அவளுடைய கால்கள் திரும்பிச் செல்ல மறுத்து விட்டன. எனவே, பலகணியின் அருகில் சுவர் ஓரமாக நின்று அவர்கள் பேசுவதைக் கேட்க வேண்டியதாயிற்று.

"மாமல்லருக்குப் பெண் கொடுக்கிறேன் என்று பாண்டிய ராஜா தூது அனுப்பியதில் என்ன ஆச்சரியம்? பூலோகத்திலுள்ள ராஜ ராஜாக்கள் எல்லாம் நான் முந்தி, நீ முந்தி என்று அவருக்குப் பெண் கொடுக்கப் போட்டியிட மாட்டார்களா?" என்றாள் கமலி.

"இருந்தாலும் மகாராணிக்கு அதிலே ரொம்பவும் சந்தோஷம். மாமல்லருக்குச் சீக்கிரத்தில் கல்யாணம் செய்து வைக்க வேண்டுமென்று மகாராணிக்கு ஆசை. மூன்று தேசத்து ராஜாக்களுக்குத் திருமணத் தூது அனுப்ப வேண்டுமென்று ஏற்பாடாகியிருந்தது. அதற்குள்ளே இந்த யுத்தம் வந்து விட்டதால் தடைப்பட்டுப் போயிற்று. இப்போது பாண்டிய ராஜாவே தூது அனுப்பியிருப்பது மகாராணிக்குச் சந்தோஷமாகத்தானே இருக்கும்?" என்றான் கண்ணபிரான்.

"அப்புறம் என்ன நடந்தது? மடத்திலிருந்து மாமல்லரைத் தேரில் ஏற்றிக் கொண்டு அரண்மனைக்குப் போனாய். பிறகு?..."

"அரண்மனையில் கொண்டு போய் அவரை விட்டேன். உடனே, தாயா

பூர்வ கதை

இன்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்து முந்நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னால், பல்லவ சாம்ராஜ்யத்தின் தலைநகரான காஞ்சிமா நகரம் கல்வியிலும் கலை வளத்திலும் ஒப்பற்று விளங்கிற்று.

ஒரு நாள் மாலை இருட்டிய பிறகு பரஞ்சோதி என்னும் இளைஞன் அந்நகருக்குள் பிரவேசித்தான். திருநாவுக்கரசரின் சைவத் திருமடத்தில் சேர்ந்து கல்வி பயிலும் நோக்கத்துடன் கீழைச் சோழ நாட்டிலுள்ள திருச்செங்காட்டாங்குடியிலிருந்து வந்தவன் அவன்.

அன்று மாலை காஞ்சியில் மகேந்திர பல்லவ சக்கரவர்த்தியின் முன்னிலையில் ஆயனச் சிற்பியின் மகள் சிவகாமியின் நடன அரங்கேற்றம் நடந்து கொண்டிருந்தபோது, மகாராஷ்டிர சக்கரவர்த்தி புலிகேசி பல்லவ சாம்ராஜ்யத்தின்மீது படையெடுத்திருக்கும் செய்தி வரவே அரங்கேற்றம் நடுவில் தடைப்பட்டு நின்றது.

இதைப் பற்றி நகர மக்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டே பரஞ்சோதி காஞ்சி நகர வீதிகளில் போகையில் மதயானை ஒன்று தெறிகெட்டு ஓடிவருவதைப் பார்த்து, அதன்மேல் தன் கையிலிருந்த வேலை வீசி எறிகிறான்.

அவ்விடத்துக்கு அருகில் சிவிகையில் போய்க்கொண்டிருந்த ஆயனரும் சிவகாமியும் அவனுடைய வீரச் செயலினால் தப்புவிக்கப் படுகிறார்கள்.

பரஞ்சோதி சிறையில் அடைக்கப்பட்டு, அன்று மாலை அவன் வழியில் சந்தித்த புத்த சந்நியாசி நாகநந்தியினால் விடுவிக்கப்படுகிறான்.

இருவரும் காட்டின் மத்தியிலுள்ள ஆயனர் வீடு செல்கிறார்கள். ஆயனரின் விருப்பத்தின்படி, என்றுமழியாத வர்ணச் சேர்க்கை இரகசியத்தை அறிந்து வருவதற்காக, நாகநந்தியின் ஓலையுடன் பரஞ்சோதி வடநாடு செல்கிறான்.

வழியில் அவனை வஜ்ரபாஹு* என்னும் வீரன் சந்தித்துப் பழக்கம் செய்து கொள்கிறான். அன்றிரவு அவர்கள் தங்கிய மகேந்திர விடுதியில், பரஞ்சோதி கொண்டுபோன ஓலையை வஜ்ரபாஹு* அபகரித்துக் கொண்டு, அதற்குப் பிரதியாக வேறு ஓலையை வைத்து விடுகிறான்.

இங்கே, சக்கரவர்த்தியின் கட்டளைக் கிணங்க மாமல்லபுரத்தில் முக்கியமான சிற்பப் பணியில் ஈடுபட்டிருந்த ஆயனர், காஞ்சியில் திருநாவுக்கரசரைத் தரிசிப்பதற்காகச் சிவகாமியுடன் வருகிறார்.

அச்சமயம் மடாலயத்தில், குமார சக்கரவர்த்தி மாமல்ல நரசிம்மர் சுவாமிகளுடன் உரையாடிக் கொண்டிருக்கிறார்.

சுவாமிகளின் விருப்பத்தின்படி, சிவபெருமானின் தோற்றத்தை விவரிக்கும் அவருடைய பாசுரம் ஒன்றுக்குச் சிவகாமி அபிநயம் பிடிக்கிறாள். சபையோர் சிவபெருமானையே நேரில் கண்டதுபோல் பரவசமடைகிறார்கள். பிறகு காதல் துறைப் பாடல் ஒன்றுக்கு அபிநயம் பிடித்து, அதன் முடிவில் உணர்ச்சி மிகுதியால் சிவகாமி மூர்ச்சையடைகிறாள். அவளுக்குப் பிரக்ஞை வந்ததும் கனிவு ததும்பும் கண்களால் மாமல்ல நரசிம்மரை நோக்குகிறாள். அதே சமயத்தில் அரண்மனையிலிருந்து அவசரச் செய்தி வந்தபடியால் மாமல்லர் உடனே ரதமேறிச் செல்கிறார்.

திருநாவுக்கரசர் சிவகாமிக்கு ஆசி கூறிவிட்டு, ஆயனரிடம் தனியாக, சிவகாமி பெரும் சோதனைக்கு ஆளாகக் கூடுமென்று தமது வருங்கால திருஷ்டியில் தோன்றுவதாக எச்சரிக்கிறார்.

மாமல்லரின் ரதசாரதியான கண்ணபிரான் ஆயனரையும் சிவகாமியையும் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான்.

கண்ணபிரானின் மனைவி கமலி, சிவகாமியின் இளம் பிராயத் தோழி. இருவரும் இரவு வெகு நேரம் வரையில் அளவளாவிக் கொண்டிருந்த பின்னர், சிவகாமி தூங்கி விட்டதாக எண்ணிக் கொண்டு கமலி எழுந்து செல்கிறாள்.

கர்ணனும் சகுனியும் சிறுவர்கள். அவர்களுக்கு ராஜ நீதி தெரியாது. இவர்கள் சொல்லும் யோசனைகள் பயன் தரமாட்டா. பீஷ்மர் சொன்னதைச் செய்" என்றான் விதுரன்.

முடிவில் திருதராஷ்டிரன் பாண்டு புத்திரர்களுக்குப் பாதி ராஜ்யம் கொடுத்துச் சமாதானமாகப் போவதாகவே தீர்மானித்தான். பாண்டவர்களையும் திரௌபதியையும் அழைத்து வரப் பாஞ்சால தேசத்திற்கு விதுரனை அனுப்பினான்.

பலவகை ரத்தினங்களையும் ஏராளமான வேறு தனங்களையும் எடுத்துக்கொண்டு விதுரன் துருபதனுடைய நகரத்திற்கு விசையான வாகனத்தில் ஏறிச் சென்றான்.

* * *

துருபதனுக்குக் கிரமப்படி மரியாதை செய்து பாண்டவர்களையும் பாஞ்சாலியையும் ஹஸ்தினபுரத்துக்கு அனுப்பித் தரவேண்டும் என்று திருதராஷ்டிரன் சார்பாக விதுரன் கேட்டுக்கொண்டான்.

துருபதனுக்குச் சந்தேகம் தான். "பாண்டவர்கள் இஷ்டம் எவ்வாறோ அவ்வாறு செய்யலாம்" என்றான்.

விதுரன் குந்தி தேவியிடம் சென்று அடிபணிந்தான். "விசித்திர வீரியனுடைய புத்திரனே! என் குழந்தைகளை நீ காப்பாற்றினாய். இவர்கள் உன் குழந்தைகள். உன்னையே நம்பியிருக்கின்றனர். நீ எவ்விதம் சொல்லுகிறாயோ அவ்வாறு செய்வோம்" என்றான் குந்தி. அவளுக்கும் சந்தேகமே. பெற்ற பிள்ளைகளைப் பற்றிக் கவலைப் பட்டான்.

விதுரன், "குந்தியே! உன் மக்களுக்கு அழிவு கிடையாது. அவர்கள் ராஜ்ய பட்டாபிஷேகம் அடைவார்கள். உலகத்தில் பெரும் கீர்த்தி பெறுவார்கள். வா, போவோம்!" என்று சொல்லித் துருபதன் அனுமதியின் பேரில் எல்லாரையும் அழைத்துக்கொண்டு ஹஸ்தினபுரம் சென்றான்.

வீதிகளெல்லாம் ஜலம் தெளித்து மலர் தூவி அலங்கரிக்கப்பட்டிருந்த ஹஸ்தினபுரத்திற்குள் பாண்டவர்கள், திரௌபதியுடனும் தாயார் குந்திதேவியுடனும் பிரவேசித்தார்கள். ஜனங்களின் மகிழ்ச்சி கரை புரண்டு ஓடிற்று. மந்திராலோசனையில் முடிந்தபடியே பாதி ராஜ்யம் பாண்டவர்களுக்குத் தரப்பட்டது. யுதிஷ்டிரனுக்கு முறைப்படி ராஜ்யாபிஷேகமும் நடந்தது.

"என் சகோதரன் பாண்டு இந்த ராஜ்யத்தை விருத்தி செய்தான். அவன் மகனான நீயும் கீர்த்தி பெற்றுச் சுகமாக இருப்பாயாக! பாண்டு என் கட்டளையை எப்போதும் சந்தோஷமாகச் செய்து வந்தான். அவ்வாறே நீயும் என்னிடம் அன்பாக இருக்க வேண்டும். என் மக்கள் துராத்மாக்கள். அகங்காரம் கொண்டவர்கள். இவர்களுடன் உங்களுக்கு விரோதம் வராமலிருப்பதற்காக நான் இந்த ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்கள் காண்டவப் பிரஸ்தத்துக்குப் போய் அங்கே உங்கள் ராஜதானியை அமைத்துக் கொள்ளுங்கள். நம்முடைய முன்னோர்கள் புரூரவனும் நகுஷனும் யயாதியும் அந்த நகரத்தில் தான் இருந்து ராஜ்ய பாரம் வகித்து வந்தார்கள். நம்முடைய வம்சத்துக்கு அதுதான் புராதன ராஜதானி. அதை நீ புனருத்தாரணம் செய்து புகழ் பெறுவாய்" என்றான்.

இவ்வாறு திருதராஷ்டிரன் யுதிஷ்டிரனுக்கு நல்ல வார்த்தைகளைச் சொன்னான். பாண்டவர்களும் பாழாகக் கிடந்த காண்டவ பிரஸ்தத்தை வாஸ்து நிபுணர்களைக் கொண்டு புதுப்பித்து மாளிகைகளும் கோட்டைகளும் கட்டி இந்திரப் பிரஸ்தம் என்ற பெயர் சூட்டி உலகமெல்லாம் வியக்கும்படியான அழகிய நகரம் உண்டாக்கினார்கள். அவ்விடத்தில் பாண்டவர்கள் இருபத்திமூன்று வருஷம் தருமம் தவறாமல் அரசு புரிந்துகொண்டு தாயாருடனும் திரௌபதியுடனும் சுகமாக இருந்து வந்தார்கள்.



தைத் தாக்க வேண்டும். பராக்கிரம முறையே க்ஷத்திரியர்களுக்குச் சிறந்த முறை. அதைக் கையாள வேண்டும். தந்திரங்கள் வீணாகும்" என்றான்.

கர்ணன் சொன்னதைக்கேட்ட திருதராஷ்டிரன் ஒன்றும் நிச்சயம் செய்ய முடியாதவனாகிப் பீஷ்மரையும் துரோணரையும் அழைத்து ஆலோசிக்கலானான்.

பாண்டவர்கள் உயிருடன் இருப்பதை அறிந்து பீஷ்மர் மிகவும் மகிழ்ச்சியடைந்திருந்தார். அவரைப் பார்த்து, திருதராஷ்டிரன்,

"பீஷ்மரே! பாண்டவர்கள் உயிருடன் இருக்கிறதாக இப்போது தெரிகிறது. பாஞ்சால தேசத்தில் துருபதனிடம் இருக்கிறார்கள். என்ன செய்யலாம்?" என்று கேட்டான்.

"அந்த வீரர்களோடு சமாதானம் செய்து கொண்டு ராஜ்யத்தில் பாதி அவர்களுக்குக் கொடுப்பதுதான் கிரமம். இதுதான் நாட்டிலுள்ள ஜனங்களுக்கெல்லாம் விருப்பம். குலத்தின் பெயரைக் காப்பாற்றவும் இதுவே வழி. அரக்கு மாளிகை தீப்பற்றி எரிந்ததைப் பற்றி ஊரில் பலவாறாகப் பேசி வருகிறார்கள். உன் மேல் எல்லாரும் குற்றம் சொல்லுகிறார்கள். இப்போது நீ பாண்டவர்களை அழைத்துப் பாதி ராஜ்யம் கொடுத்துப் பட்டாபிஷேகம் செய்து வைத்தால் அந்தப் பழி நீங்கும். இதுவே என் யோசனை" என்று தருமமும் நீதியும் அறிந்த பீஷ்மர் சொன்னார்.

துரோணரும் அவ்வாறே சொன்னார். "நல்ல தூதனை அனுப்பிச் சமாதானம் பேசி அவர்களை வரவழைத்து யுதிஷ்டிரனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்து அவனுக்குப் பாதி தேசம் கொடுத்து விடுவதே மேலான யோசனை" என்று அவரும் சொன்னார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த கர்ணனுக்குக் கோபாவேசம் வந்தது. அவனுக்குத் துரியோதனனிடம் அளவு கடந்த நட்பு, பாண்டவர்களுக்குப் பாதி ராஜ்யம் தரும் யோசனை அவனுக்குப்பிடிக்கவேயில்லை. திருதராஷ்டிரனைப் பார்த்து அவன் சொன்னதாவது:

"உம்மிடத்தில் பொருளும் அந்தஸ்தும் பெற்ற துரோணர் இவ்விதம் யோசனை சொல்லுவது எனக்கு வியப்பாக இருக்கிறது. மந்திரிகளுடைய யோக்கியதையை நன்றாக ஆராய்ந்துதான் அவர்கள் சொல்லும் யோசனையை அரசன் பரிசீலனை செய்ய வேண்டும். பேச்சுக்கு மட்டும் மதிப்பு கொடுத்து விடக் கூடாது."



ஸ்ரீ கிருஷ்ணன்

இவ்வாறு கர்ணன் சொன்னதைக் கேட்ட துரோணருக்குப் பெருங்கோபம் வந்தது. "துஷ்டனே! நீ அரசனுக்குத் துன்மார்க்கத்தை உபதேசிக்கிறாய், மரியாதை தவறிப் பேசுகிறாய். நானும் பீஷ்மரும் சொன்னதைத் திருதராஷ்டிரன் கேட்காமற் போனால் கௌரவர்கள் சீக்கிரத்தில் அழிந்து போவார்கள் என்பது நிச்சயம்" என்றார்.

பிறகு திருதராஷ்டிரன் விதுரனைக் கேட்டான். "குலத்துக்குத் தலைவரான பீஷ்மரும், ஆசாரியரான துரோணரும் சொன்ன யோசனையே மேலானது. அறிவில் சிறந்த அவர்கள் சொல்லைப் புறக்கணிக்க வேண்டாம். அவர்கள் எந்தக் காலத்திலும் நமக்கு நன்மையே செய்து வந்தவர்கள். துரியோதனன் முதலியவர்களைப் போலவே உமக்குப் பாண்டவர்களும் புத்திரர்கள் ஆவார்கள். அவர்களுக்குத் தீங்கு இழைக்க யாராவது யோசனை சொன்னால் அவர்கள் குலத்தைக் கெடுக்க வந்தவர்கள் என்று நீர் கருத வேண்டும். துருபதனும் அவன் புத்திரர்களும் கிருஷ்ணனும் அவரைச் சேர்ந்த யாதவர்களும் பாண்டவர்களுக்குப் பெரும் பக்கபலமாக இருக்கிறார்கள். அவர்களை யுத்தத்தில் வெல்ல முடியாது. கர்ணன் சொல்லும் யோசனை பயனற்றது. பாண்டவர்களை அரக்கு மாளிகையில் வைத்து அவர்களைக் கொல்லப் பார்த்ததாகப் பழி நம் பேரில் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பழியை முதலில் நீக்கிக் கொள்ளவேண்டும். நம்முடைய நகரத்திலும் நாட்டிலும் உள்ள ஜனங்கள் பாண்டவர்கள் உயிருடன் இருப்பதைக் கேட்டு மகிழ்ந்து அவர்களைப் பார்க்க வேண்டுமென்று ஆசை கொண்டிருக்கிறார்கள். துரியோதனனுடைய பேச்சைக் கேட்க வேண்டாம்.

குத் தெரியக்கூடாது. அதற்காகத்தான் நான் அவனிடம் அவ்வாறு நடந்து கொண்டேன். இப்போது செய்யத் தக்கது என்னவென்று உங்கள் யோசனையைச் சொல்லுங்கள் பார்ப்போம்" என்றான் திருதராஷ்டிரன்.

துரியோதனன் சொன்னான் :

"எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. கவலையில் சிக்கித் தடுமாறுகிறேன். என் புத்தி பலவாறாக ஓடுகிறது. இந்தப் பாண்டவர்கள் ஐவரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் அல்ல. மாத்ரி குமாரர்களுக்கும் மற்ற மூவருக்கும் எப்படியாவது விரோதம் மூட்டிவிடுவது ஒரு வழி. துருபதனுக்குத் திரவியம் நிறையக் கொடுத்து அவனை நம்முடைய கட்சியில் எப்படியாவது சேர்த்துக் கொள்ளப் பார்க்கலாம். தன் மகளைப் பாண்டவர்களுக்குக் கொடுத்திருக்கிற ஒரு காரணத்தினாலேயே நாம் அவனைச் சிநேகம் செய்ய முடியாமல் போகாது. தனத்தின் பலத்தினால் ஆகாத காரியத்தையுங்கூடச் செய்து முடிக்கலாம்."

கர்ணன் நகைத்தான். "இது வீண் பேச்சு" என்றான்.

"எவ்விதத்திலாவது யுக்தி செய்து அந்தப் பாண்டவர்கள் இங்கே வந்து நம்முடைய வசத்திலிருக்கும் ராஜ்யத்திற்கு உரிமை கோராமல் செய்ய வேண்டும். பிராமணர்களைத் துருபதன் நகரத்திற்கு அனுப்பி அங்கே வதந்திகளை உலாவச் செய்யலாம். பல பேர்கள் தனித் தனியாகப் போய்ப் பாண்டவர்களிடம் சொல்லட்டும். 'ஹஸ்தினாபுரத்திற்கு நீங்கள் சென்றால் உங்களுக்கு அபாயம் நேரிடும்' என்று பலர் சொல்லிப் பயம் உண்டாக்கினால் பாண்டவர்கள் இவ்விடம் வராமல் இருப்பார்கள்" என்றான்.



துரியோதனன்

"இதுவும் உபயோகமற்ற யோசனை" என்றான் கர்ணன்.

மறுபடியும் துரியோதனன், "திரௌபதியைக் கொண்டு பாண்டவர்களுக்குள் விரோதம் உண்டாக்க முடியாதா? இயற்கைக்கு மாறாகப் பல புருஷர்கள் ஒரு ஸ்திரீயை மணந்திருக்கிறார்கள். இது நமக்குப் பெரும் வசதி தருகிறது. நிபுணர்களைக் கொண்டு அவர்கள் மனத்தில் சந்தேகத்தையும் பொறாமையையும் கிளப்பி விடலாம். நிச்சயமாகப் பலனைப் பெறுவோம். அழகான பெண்களைத் தேடிக் குந்தி புத்திரர்களில் சிலரை ஏமாற்றித் திரௌபதியை இவர்கள் மேல் வெறுப்புக் கொள்ளவும் செய்யலாம். இவர்களில் யாராவது ஒருவன் பேரில் திரௌபதிக்கு விரோதம் ஆரம்பித்தால் அவனை நாம் ஹஸ்தினாபுரத்துக்குக் கூப்பிட்டழைத்து மேலே செய்யக்கூடிய தந்திரங்களைச் செய்யலாம்" என்றான்.

கர்ணன் இதற்கும் நகைத்தான். "துரியோதனா! உன்னுடைய யோசனைகள் எதுவும் சரியாயில்லை. இந்தப் பாண்டவர்களைத் தந்திரத்தினால் ஜெயிக்க முடியாது. இவ்விடம் அவர்கள் இருந்த காலத்தில், சிறகு முளைக்காத பறவைக் குஞ்சுகள்போல் இருந்தார்கள். அப்போதுங்கூட உன்னால் அவர்களை ஏமாற்ற முடியவில்லையே? இப்போது அவர்கள் அனுபவம் அடைந்து வேறு அரசனிடம் சரண் புகுந்திருக்கிறார்கள். உன்னுடைய எண்ணங்கள் அவர்களுக்குத் தெரிந்து போயிற்று. ஆகையால் தந்திரங்கள் உதவாது. அவர்களை மித்திர பேதம் செய்து ஜெயிப்பது அசாத்தியம். துருபதராஜன் யோக்கியமானவன். அவனை விலைக்கு வாங்க முடியாது. பாண்டவர்களை ஒருக்காலும் அவன் விட்டு விடமாட்டான். திரௌபதியும் அவர்கள் பேரில் ஒரு நாளும் வெறுப்புக் கொள்ள மாட்டாள். ஆகையால் நமக்கு இருக்கும் வழி ஒன்றே. இவர்களுடைய பலம் இன்னும் அதிகமாக வளருவதற்கு முன் நாம் இவர்களைத் தாக்கி யுத்தம் செய்து அழித்து விடுவதே வழி. அவர்களுடன் இன்னும் பல வேறு சிநேகிதர்கள் சீக்கிரத்தில் சேர்ந்து விடுவார்கள். அதற்கு முன் நாம் தாக்க வேண்டும். கிருஷ்ணன் யாதவ சேனையோடு துருபதன் தேசம் வந்து சேருவதற்கு முன் நாம் பாண்டவர்களையும் துருபதனையும் தாக்கி அடித்துவிட வேண்டும். துருபதன் எதிர்பார்க்காமல் இருக்கும் போதே, திடீர் என்று நாம் அந்த நகரத்

வியாசர் விருந்து

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

இந்திரப்பிரஸ்தம்

பாஞ்சாலியின் சுயம்வரத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றி வதந்திகள் ஹஸ்தினாபுரத்துக்கு வந்ததும் விதுரன் மகிழ்ச்சி யடைந்து வேகமாகத் திருதராஷ்டிரனிடம் சென்று, "திருதராஷ்டிரனே, நம்முடைய குலம் பலமடைந்து விட்டது. துருபதன் மகள் நமக்கு மருமகளாய் விட்டாள். நமக்கு நல்ல காலம்" என்றான்.

துரியோதனனிடம் இருந்த அளவு மீறிய பட்சபாதத்தினால் அறிவை இழந்த திருதராஷ்டிரன் விதுரன் கொண்டுவந்த செய்தியைத் தவறாகப் பொருள் செய்து கொண்டான். துரியோதனனும் சுயம்வரத்துக்குப் போயிருந்தானல்லவா? அவன்தான் திரௌபதியை அடைந்து விட்டான் என்று எண்ணிக் கொண்டு, "நல்ல காலம்! நல்ல காலம்! உடனே போய் மருமகள் திரௌபதியை அழைத்து வா. பாஞ்சாலியைத் தகுந்த மரியாதையோடு வரவேற்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் தாமதமின்றிச் செய்" என்றான்.

இதைக் கேட்ட விதுரன் உண்மையில் நடந்ததை அவனுக்குச் சொன்னான். "பாக்கியசாலிகளான பாண்டவர்கள் உயிருடனிருக்கிறார்கள். துருபதன் மகளை அருச்சுனன் சுயம்வரத்தில் பெற்றான். பாண்டவர்கள் ஐவரும் மந்திர பூர்வமாக அவளைப் பாணிக்கிரகணம் செய்து கொண்டார்கள். அவர்கள் எல்லாரும் குந்தி தேவியுடன் துருபதனுடைய பாதுகாப்பில் க்ஷேமமாயிருக்கிறார்கள்" என்று விதுரன் சொன்னதைக் கேட்ட திருதராஷ்டிரன் தன்னுடைய ஏமாற்றத்தைக் காட்டிக் கொள்ளாமல்,

"விதுரனே! நீ சொல்லுவது எனக்கு மகிழ்ச்சி உண்டாக்கிற்று. அன்புக்குரிய பாண்டவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? நெருப்பில் மாண்டார்கள் என்றல்லவோ துக்கப்பட்டுக் கொண்டிருந்தேன்? நீ இப்போது கொண்டு வந்த செய்தி என்னுடைய உள்ளத்தைப் பூரிக்கச் செய்கிறது. துருபதன் மகள் நமக்கு மருமகளானாளா? எல்லாம் நல்லது, நல்லது!" என்று சொல்லித் தானும் மகிழ்ச்சியடைந்ததைப் போலவே காட்டிக் கொண்டான்.

பாண்டவர்கள் அரக்கு மாளிகையிலிருந்து எப்படியோ தப்பிப் பிழைத்து, ஒரு வருஷ காலம் மறைவாக இருந்து விட்டு இப்போது பாஞ்சால வல்லரசனுடைய மகளை மனைவியாகப் பெற்று முன்னைவிட அதிக பலம் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டு துரியோதனனுக்கு முன்னிருந்த பொறாமையும் விரோதமும் இருமடங்காயின.

"புரோசனனை நம்பிக் கெட்டோம். நம்முடைய சூழ்ச்சியெல்லாம் வீணாயிற்று. நம்முடைய பகைவர்களான இந்தப் பாண்டு புத்திரர்கள் நம்மை விடச் சாமர்த்தியசாலிகள். தெய்வமும் இவர்களுக்குத் துணையாயிருக்கிறது, மரணம் இவர்களை எட்டவே எட்டாது போல் இருக்கிறது. திருஷ்டத்யும்னனும் சிகண்டியும் இவர்களுக்குத் துணையாய் விட்டார்களே! மாமா! பயமாயிருக்கிறதே, என்ன செய்வது?" என்று துரியோதனனும் துச்சாதனனும் சகுனியிடம் முறையிட்டார்கள்.

கர்ணனும் துரியோதனனும் திருதராஷ்டிரனிடம் சென்றார்கள்.

"விதுரனிடம் நீர் இது நல்ல காலம் என்று சொன்னீரே! விரோதிகள் அபிவிருத்தி அடைவது நமக்குத் தீமையல்லவா? பாண்டவர்கள் நமக்கு விரோதிகளாயிற்றே! அவர்கள் நம்மை அழித்து விடுவார்கள். நாம் அவர்களுக்குச் செய்யப் பார்த்தது நிறைவேறவில்லை. நிறைவேறாத காரியங்கள் நமக்கே பெரிய அபாயமாகும் என்பதை நீர் அறியவில்லையா? எப்படியாவது நாம் அவர்களை இப்போது அழித்துவிட வேண்டும். இல்லாவிடில் நாம் கெட்டுப் போவோம். இதற்கு யோசனை செய்வீராக" என்றார்கள்.

"மகனே! நீ சொல்லுவது உண்மை. ஆனால் நம்முடைய கருத்து விதுரனுக்

மந்திரக் கிழவரும்,
நகர மாந்தரும்,

தந்திரத் தலைவரும்
தரணி பாலரும்

அந்தர முனிவரோ(டு)
அறிஞர் யாவரும்

சுந்தரக் குரிசிலை
மரபில்ச் சுற்றினார்.

[தந்திரத் தலைவர்: சேனை நடத்தும் தலைவர்; தரணி பாலரும்: சிற்றரசர்களும்; அந்தர முனிவரோடு: தவ ஒழுக்கத்தில் மிகச் சிறந்தவரோடு.]

எல்லாரும் உட்கார்ந்து கொண்டார்கள். பரதனுடைய வருத்தமும் துயரமும் அளவிட முடியாதபடி இருப்பதைத் தெரிந்து கொண்டார்கள். பேச நா எழவில்லை ஒருவருக்கும்.

தசரதனது தேர்ப்பாகனும் மந்திரியுமான சுமந்திரன் பார்த்தான். பரதனுக்குரிய கடமையை எப்படியும் சொல்ல வேண்டியதுதானே என்று எண்ணுகிறான்.

சுற்றினர் இருந்துழி
சுமந்திரப் பெயர்ப்

பொற்றடம் தேர்வலான்
புலமை யுள்ளத்தான்,

கொற்றவற்(கு) உறுபொருள்
குறித்த கொள்கையான்,

முற்றுணர் முனிவனை
முகத்து நோக்கினான்.

[பொற்றடம் தேர்வலான்: சுமந்திரன்; புலமை யுள்ளத்தான்: மிக்க அறிவுடையவன்; கொற்றவற்கு உறுபொருள் குறித்த கொள்கையான்: பரதனுக்குச் சொல்ல வேண்டிய விஷயத்தை மனசில் எண்ணியவனாய்; முற்றுணர் முனிவனை முகத்து நோக்கினான்: யாதொரு வார்த்தையும் சொல்லாமலே எல்லாவற்றையும் தெரியவல்ல வசிஷ்டரின் முகத்தைப் பார்த்தான்.]

சுமந்திரன் எப்படியோ சமாளித்துக் கொள்கிறான், பேச வேண்டிய காரியத்தைப் பேசாமலே. வசிஷ்டருக்கு வந்து விட்டது பொறுப்பு. என்னதான் பேசுவாரோ? அடுத்த இதழில் பார்க்கலாம்.



பாபுலர் ஹவுஸ்!

★

பெரிய பட்டணங்களில் துணிமணிக் கடைகளுக்குப் பஞ்சமில்லை. ஆனல் எங்கே நல்லதாகக் கிடைக்கும். எங்கே மோசமில்லாமலிருக்கும்?' என்ற விசாரம் மட்டும் யாருக்கும் இருப்பது சகஜந்தானே?



இன்று இந்த சென்னைப் பட்டணத்தில் யாவருக்கும் அந்த விசாரம் இல்லை; நல்ல பண்டம் நியாயமான விலைக்குக் கிடைக்குமிடம் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் போவதும் பிறருக்கு சிபார்சு செய்வதும் அந்த ஒரு கடைதான்.

'பாபுலர் சுதேசிஸ்' பொது ஜனங்களின் அபிமானத்தைப் பெற்றுள்ள கடை. "நியாயமான விலை; எல்லோருக்கும் ஒரே விலை" என்று தனது பெயருக்கேற்ப உண்மைப் பெயர் வாங்கின கடை.

பாபுலரின் நாணயம், பொது ஜனங்களுக்குப் பாபுலரில் உள்ள அபார நம்பிக்கை இவைகளே முறையே அஸ்திவாரமாகவும் கட்டிடமாகவும் கொண்டு இன்று 'பாபுலர் ஹாவுஸ்' சேவை செய்து வருகின்றது. சுதேசி, பட்டு, கம்பளி, பஞ்சு ஆடைகள் ஸகல ரகங்களிலும், ஸகலருடைய தேவைக்கும் கிடைக்கும். 'ஜவுளி ரகத்தில் இப்படியும் உண்டா' எனப் பார்த்ததும் மலைப்புத் தட்டும் தினுசுகள் நிறைந்து அழகிலும் அமைப்பிலும் வர்ண வேறுபாடுகளிலும் அடுக்கடுக்காய்க் குவிந்துள்ளன. இன்றே ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

★

டெலிபோன்: 86220

பாபுலர் சுதேசி ஸ்டோர்ஸ்

34, பைக்ராப்ட்ஸ் ரோடு :: திருவல்லிக்கேணி :: மதராஸ்

கம்பர் தரும் காட்சி

67. நோக்கினால் சொன்னாள்!

கோசலை ஒரு இல்லறத் துறவி. அன்பு மயமான தேவதை. "ராஜாங்கம், அதிகாரம், செல்வம் இவையெல்லாம் ஏதோ சாமான்யமான காரியம்; ராஜ்யத்தை ராமன் ஆண்டால் என்ன, பரதன் ஆண்டால் என்ன?" என்று எண்ணுகிறவள். இந்த மன நிலையில்தான் மனம் புண்பட்டுக் கிடந்த பரதனை 'சக்கரவர்த்தியே!' என்று சொல்லி வாழ்த்தினாள். பரதனால் இதைத் தாங்க முடியுமா? மூர்ச்சித்து அவள் காலில் விழுந்து கிடக்கிறான். கோசலை என்ன செய்வாள்? பேச முடியாத நிலையில் நிற்கிறாள்.

அந்தச் சமயம் வசிஷ்டர் அந்த இடத்துக்கு வருகிறார். அவர் வந்தது பரதன் கண்ணுக்குத் தென்பட்டது. அவருக்கும் தந்தைக்கும் இடையேயுள்ள நட்பும் உறவும் ஞாபகத்துக்கு வந்தது. துயரம் மேலிடுகிறது.

வந்த மாதவன்
தாளில் வள்ளல்வீழ்ந்(து),

'எந்தை யாண்டையான்,
இயம்பு வீர்'என

நொந்து மாழ்கினான்;—
நுவல்வ(து) ஓர்கிலா(து)

அந்த மாதவன்
அழுது புல்லினான்.

[வள்ளல்: பரதன்; எந்தை யாண்டையான் இயம்புவீர் என: என் தந்தை தசரதச் சக்கரவர்த்தி எங்கே போய் விட்டான்? நீங்கள்தான் சொல்லுங்களேன் என்று; நொந்து மாழ்கினான்: துயரத்தால் சோர்ந்தான்; நுவல்வது ஓர்கிலாது: வசிஷ்டருக்கு ஒன்றும் பேச இயலவில்லை. குறிப்பு:— **கொஞ்சம் இறங்கியிருந்த துயரம் வசிஷ்டரைக் கண்ட மாத்திரத்தில் மறுபடியும் மேலிடுகிற விஷயம் அருமையான பாவத்தில் அமைந்திருக்கிறது. அப்படியேதான் வசிஷ்டருக்குப் பதில் சொல்ல முடியவில்லை என்கிற பாவமும்.]**

வசிஷ்டர் பரதனை ஒருவாறு தேற்றி ஒரு இடத்துக்கு அழைத்துப் போய்ப் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ளுகிறார். இந்த விஷயம் ஜனங்களுக்குத் தெரிய வந்தது. அவர்களில் முக்கியஸ்தர்கள் அப்படியே கூடி விட்டார்கள். மெள்ளப் பக்குவமாக பரதன் இருக்கும் இடத்துக்கு வருகிறார்கள்.

வரன்முறை தெரிந்துணர்
மரபை ஓதிய

அருமறை முனிவனும்
ஆண்டை யான்என,

விரைவின்வந் தீண்டினர்,
விரகின் எய்தினர்,

பரதனை வணங்கினர்
பரியும் நெஞ்சினர்.

[வரன் முறை தெரிந்துணர் மரபை ஓதிய: அரச வம்சத்துக்குரிய வாரிசு பரம்பரையை எடுத்துச் சொல்லும்; அருமறை முனிவனும்: சாஸ்திரங்களையெல்லாம் கற்ற வசிஷ்டரும்; ஆண்டையான் என: பரதனுடனேயே இருக்கிறார் என்று தெரிந்து; விரைவின் வந்து ஈண்டினர்: அரண்மனைக்கு வெளியே வெகு சீக்கிரத்தில் வந்து கூடி விட்டார்கள்; விரகின் எய்தினர்: ஆனால் மெள்ளப் பக்குவமாக உள்ளே புகுந்தார்கள்; பரியும் நெஞ்சினர்: அனுதாபமுள்ளவர்களாய்; பரதனை வணங்கினர்: சக்கரவர்த்தி என்று மரியாதை செய்கிறார்கள்.]

மந்திரிமார்களும், நகரத் தலைவர்களும், சேனைத் தலைவர்களுமாக வந்து பரதனைச் சூழ்ந்தார்கள்.

ஆகாச வெடி

"என் மௌனத்திலிருந்து என்ன வேண்டுமானாலும் ஊகித்துக் கொள்ளலாம் என்று காந்திஜி தம்மைச் சந்தித்த நிருபர்களிடம் கூறினார்."

—ஜ"ஹ" செய்தி.

காந்திஜி பேச விரும்பவில்லை என்பதை அவருடைய மௌனத்திலிருந்து நிருபர்கள் ஊகித்துக் கொண்டிருப்பார்களென்று நம்புகிறோம்!

★

சென்னையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சங்கீத சபை ஒன்றில் "நமது சங்கீதத்தை ஒருவராலும் விரட்டி விட முடியாது" என்று ஒரு பிரமுகர் பேசினார். —ஒரு செய்தி.

ஆனால் நமது சங்கீத வித்வான்களால் பல பேர்களை விரட்ட முடியும் என்பதை மேற்படி பிரமுகர் அறிந்திருப்பார் என்று நம்புகிறோம்.

★

"கொல்லம் கோவில் யானை ஒன்று கிணற்றில் விழுந்து இறந்து போய் விட்டது. யானையின் மரணத்தைக் குறித்து ஊரார் அனைவரும் பெருத்த துக்கத்தில் ஆழ்ந்திருந்தனர்."

—ஒரு செய்தி.

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்" ஆகையால் யானையின் மரணத்தைக் குறித்து துக்கப்பட்டிருக்கத் தேவையில்லை.

★

"பெஜவாடாவில் பிலிம் கிடங்கொன்றில் பல சினிமாப் படங்களும் சில நெகடிவ் ரீல்களும் தீப்பிடித்து எரிந்து போயின."

—ஒரு செய்தி.


தீப்பிடித்து எரிந்த காட்சியைப் படமாக எடுத்து வைத்துக்கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறோம்.

★

"விறகு வர்த்தகர்கள் சங்கம் நாளைய தினம் கண்ணீர் தொட்டியில் கூடும்."

—சென்னைச் செய்தி.

விறகு கிடைக்காத கஷ்டத்தை அங்கே அழுது தீர்க்கலாமல்லவா?



பாலன்

"ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு இன்னொரு கன்னத்தையும் காட்டு என்பது தங்கள் திருவாக்கு அல்லவா?"

"ஆம்; அதற்கென்ன?"

"அதை ஒரு திருத்தத்துடனே எங்கள் நேசக் கட்சியார் கடைப்பிடிக்கிறார்கள். திருத்தப்பட்ட திருவாக்கியம் என்னவென்றால், 'ஒரு கன்னத்திலே அடிக்க வந்தவனை இரண்டு கன்னத்திலும் தீட்டு!' என்பதுதான். இது இரண்டாவது போர்முனை என்று தாங்கள் கேள்விப்படவில்லையா?" என்றோம்.

ஏசுநாதர் இதற்கு மறுமொழி கூறாமல், மீண்டும் ஆகாசத்தை நோக்கி, "கடவுளே! நீ எங்கே இருக்கிறாய்?" என்று புலம்பத் தொடங்கவே, அவருக்குக் கடவுள்தான் ஆறுதல் அளிக்க வேண்டுமே தவிர நம்மால் முடியாதென்று தீர்மானித்து, அங்கிருந்து கிளம்பினோம்.

மீண்டும் நாரத முனிவர் எதிர்ப்பட்டார்.

"சுவாமி! எல்லாம் சரிவர நடக்கிறதா?" என்று கேட்டோம்.

"திவ்யமாய் நடக்கிறது" என்றார் நாரதர்.

"தாங்கள் முக்காலும் அறிந்த முனிவர் ஆயிற்றே! ஒரு விஷயம் சொல்ல வேண்டும்" என்றோம்.

"என்ன?" என்றார் நாரதர்.

"சண்டையில் எந்தக் கட்சி ஜயிக்கும்?" என்று கேட்டோம்.

"சத்தியம் உள்ள கட்சி ஜயிக்கும்!" என்று நாரதர் அருளினார்.

"அழகுதான்! இப்படிச் சொன்னால் என்ன பிரயோஜனம்?" என்று கூறி, பூலோகத்தில் வழங்கும் ஒரு கதையைச் சொன்னோம்.

கீழ்க் கோர்ட்டில் ஒரு வழக்கில் தீர்ப்புச் சொல்லப்பட்ட உடனே, வக்கீல் தம்முடைய கட்சிக்காரனுக்குப் பின் வருமாறு தந்தி கொடுத்தாராம்:— "சத்தியம் ஜயித்தது. மேல் கோர்ட்டில் அப்பீல் செய்ய வேண்டும். உடனே பணம் அனுப்பவும்!"

இதைக் கேட்டு நாரதர் சிரித்துவிட்டு, "சரி; அந்த மாதிரி இப்போது என்ன?" என்றார்.

"அந்த மாதிரி, சத்தியத்தின்மேல் பாரத்தைப் போடுவதில் பிரயோஜனம் இல்லை. டன்கேர்க்கில் ஜெர்மானியர் ஜயித்தபோது சத்தியம் ஜயித்ததா?" என்றோம்.

"முடிவான சண்டையில் அல்லவா பார்க்க வேண்டும்?" என்று நாரதர் சொன்னார்.

"எது முடிவான சண்டை என்று எப்படிக் கண்டு பிடிப்பது? போன யுத்தத்தின் தொடர்ச்சிதான் இந்த யுத்தம் என்று சிலர் சொல்லுகிறார்கள். இந்த யுத்தத்தின் தொடர்ச்சி இருபது வருஷம் கழித்து வரலாமல்லவா?"

"நல்லது; அதிக பலமுள்ள கட்சி ஜயிக்கும்!" என்றார் நாரதர்.

"சந்தோஷம்; அதிக பலம் பிரிட்டிஷ்-அமெரிக்கர் கட்சியிலேதான் இருக்கிறது" என்றோம்.

"ஆனால் அந்த பலம் இங்கே வந்து சேர வேண்டுமே!" என்றார் நாரதர்.

"இன்றைக்கு வராவிட்டால் நாளைக்கு வருகிறது. நாளைக்கு வராவிட்டால் அடுத்த மாதம் வருகிறது" என்றோம்.

"ஓகோ! உமக்கு எல்லாம் தெரியும் போலிருக்கிறதே! அப்படியானால், இது நிச்சயமாக இரண்டாவது போர்முனை தானா?" என்று நாரதர் நம்மைக் கேட்டார்.

"பிரிட்டிஷ்-அமெரிக்கப் படைகள் இன்னும் ஒரு மாதம் வரையில் இங்கு நிலைத்து நின்றால், இது இரண்டாவது போர்முனைதான்."

"இல்லாவிட்டால்?"

"இல்லாவிட்டால், இது பரீட்சார்த்தப் போர்முனை; இரண்டாவது போர்முனையை வேறிடத்தில் ஆரம்பிக்க வேண்டும்" என்றோம்.

இந்தச் சமயத்தில் ஒரு குண்டு விமானமும் இரண்டு சண்டை விமானமும் ஒன்றையொன்று துரத்திக்கொண்டு நாங்கள் நின்ற இடத்துக்கு அருகில் வரவே, நாரதர் துரித காலத்தில் அங்கிருந்து அப்பால் சென்றார்.

நாமும் நமது ஓட்டை வான ரதத்தைப் பத்திரமாய்ப் பூமியில் இறக்கினோம்.

கத்தை நெருங்கி வருகையில், எதிரே ஒற்றைத் தந்தி தம்புராவை மீட்டிக் கொண்டு நாரத முனிவர் குஷாலாக வந்துகொண்டிருந்தார்.

''சுவாமி! எங்கே போகிறீர்கள்? எல்லா மேல் உலகமும் காலி!'' என்றேம்.

''தப்பித் தவறி யாராவது இருந்தால் அழைத்துப் போகலாம் என்று வந்தேன். ஒருவரும் இல்லையோ? நிச்சயந்தானே?'' என்றார் நாரதர்.

''நிச்சயந்தான்; எல்லாரும் எங்கே போயிருக்கிறார்கள்?'' என்று கேட்டோம்.

''இவ்வளவுதானா? உமக்குத் தெரியாதா? பூலோகத்தில் இராம ராவண யுத்தத்தையும், மகாபாரத யுத்தத்தையும், தேவேந்திரன் விருத்திராசுரன் யுத்தத்தையும், சுப்பிரமணியர் சூரபத்மன் யுத்தத்தையும் காட்டிலும் பெரிய பிரமாண்ட யுத்தம் நடந்து கொண்டிருக்கிறதே!'' என்றார் நாரதர்.

''எதைச் சொல்கிறீர்கள்? பிரஞ்சுக் கடற்கரையோரமாக ஆரம்பித்திருக்கும் இரண்டாம்போர் முனை யுத்தத்தையா?'' என்று கேட்டோம்.

''அதுவேதான். இதற்குள்ளே என்னென்ன அமர்க்களம் நடந்திருக்கிறதோ? நீரும் வருவதானால் என்னுடன் வாரும்!'' என்று கூறிவிட்டு நாரதர் திரும்பினார்.

அவரைப் பின்பற்றி நமது ஓட்டை ரதமும் சென்றது.

பூலோகத்தைச் சமீபித்த போது மேக மண்டலத்துக்கு வெகு தூரத்துக்கு மேலேயே தேவர்கள் கூட்டம் கூட்டமாய் நிற்பதைக் கண்டோம். அவர்களில் அநேகர் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் மூலம் கீழே நோக்கிக் கொண்டிருந்தார்கள். வேறு சிலர் கடைசியாக வந்த யுத்தச் செய்திகள் அடங்கிய ''தேவலோகப் புளுகன்'' என்னும் பத்திரிகையைப் படித்துக் கொண்டும், இடையிடையே கீழ் நோக்கி உற்றுப் பார்த்துக் கொண்டுமிருந்தார்கள்.

இன்னும் பல தேவர்கள் புஷ்பக் கூடைகளைத் தயாராய் வைத்துக் கொண்டு ஜயித்தவர்கள் தலையில் கொட்டுவதற்கு ஆயத்தமாயிருந்தார்கள்.

''இவர்கள் எல்லாம் ஏன் இவ்வளவு உயரத்தில் நிற்கிறார்கள்? மேக மண்டலத்துக்குக் கீழே நின்றல்லவா இவர்கள் யுத்த வேடிக்கை பார்ப்பது வழக்கம்!'' என்று நாரதரைக் கேட்டோம்.

''ஆ! அதை ஏன் கேட்கிறீர்கள்? தேவர்கள் வழக்கமாக நிற்கும் இடங்களில் எல்லாம் இப்போது சண்டை விமானங்களும், குண்டு விமானங்களும் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றன. சில சமயம், இன்னும் மேலேகூட வருகின்றன. ஆகையால், இந்த யுத்தத்தில் 'கிளிஸ்டர் காலரி'யை உயரமான இடத்தில் அமைக்க வேண்டியதாயிற்று! ஆகையினால்தான், தூர திருஷ்டிக் கண்ணாடி தேவையாயிருக்கிறது!'' என்று நாரதர் கூறிவிட்டு, தமது மடியில் வைத்திருந்த தூர திருஷ்டிக் கண்ணாடியை எடுத்தார்.

''கண்ணாடி ஜாக்கிரதை, ஸ்வாமி! அது கண்ட்ரோல் சாமான்; இராணுவத்துக்குத் தேவையானது!'' என்று நாம் எச்சரித்துவிட்டு, தேவர் கூட்டங்களிடையே நெருக்கியடித்துக் கொண்டு புகுந்து சென்றேம்.

ஆகாய வெளியில் ஆதிசேஷனை விரித்துப் படுத்துக் கீழே நோக்கிக் கொண்டிருந்த மகாவிஷ்ணுவின் பக்கத்தை அடைந்தோம். அருகிலேயே பிரம்மாவும் பத்மாசனமிட்டு அமர்ந்திருந்தார். அவருடைய நாலு தலைகளும் பூமியை நோக்கிக் குனிந்திருந்தன.

சிவபெருமானை மட்டும் காணோம்.

பிரம்மதேவரை இதைப் பற்றிக் கேட்க, அவர், ''அதோ பார்!'' என்றார்.

மேற்குத் திசையில் இரத்தச் சிவப்பு நிறமடைந்திருந்த செக்கர் வானத்துக்கருகில், விரித்த செஞ்சடையோடும் சிவந்த புலி உடையோடும் அகோர ருத்திரமூர்த்தியானவர் மகா சம்ஹார நடனம் புரிந்து கொண்டிருந்தார்.

அந்த ஒளியைத் தாங்க முடியாமல் கண்களை மூடிக்கொண்டோம். அங்கிருந்து அகன்று யமனைத் தேடிக் கொண்டு சென்றேம்.

வான வெளியில் எருமை வாகனத்தில் அமர்ந்தபடியே பூமியை நோக்கி 'ஹா ஹா ஹா!' என்று பயங்கரச் சிரிப்புச் சிரித்துக் கொண்டிருந்தான் யமன்.

''தர்ம ராஜாவே! இங்கே வேடிக்கை பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கிறீர்

களே! அங்கே தங்கள் உலகத்தையே காணோமே!'' என்றோம்.

''கீழே பார்!'' என்றான் யமன்.

பார்த்தோம்; அப்போதுதான் தெரிந்தது விஷயம்.

யமதர்ம ராஜன் தன்னுடன் நரக லோகத்தையும் எடுத்துக் கொண்டு வந்து அதைப் பூமியில் இறக்கி யிருக்கிறான் என்று!

நரக லோகத்தைப் பற்றி நாம் படித்திருக்கும் வர்ணனைக்குச் சரியாக இருந்தது அப்போது தெரிந்த கீழுலகக் காட்சி.

படீர் படீர் என்று பூமி ஆங்காங்கு வெடித்தது. அந்தப் பிளவுகளிலிருந்து புகையும் நெருப்பும் குபீர் குபீர் என்று கிளம்பின.

பெரிய பெரிய கரும் பூதங்கள் நாலா புறமும் தீயைக் கக்கிக்கொண்டு அங்குமிங்கும் நடமாடின.

ஆயிரக் கணக்கான மனிதர்கள்,—திடகாத்திர தேகமுள்ள இளைஞர்கள்,—அங்கங்கே அப்படி அப்படியே விழுந்து மாண்டார்கள்.

அவர்களில் பலர் கால் வேறு, கை வேறு, தலை வேறாகச் சிதறி மாய்ந்தார்கள். சிலர் அணு அணுவாகப் பிய்ந்து புகை நெருப்புடன் கலந்து மறைந்தார்கள்.

செத்தவர்களின் உடம்பி லிருந்து பெருகிய குருதியானது ராட்சஸ பீரங்கிகள் கக்கும் நெருப்பினால் தட்சணமே காய்ந்து தரையைக் கோரமான கருஞ் செந்நிற முடையதாகச் செய்தது.

குண்டுகள் வெடிக்கும் சத்தம் காதுகளைச் செவிடுபடச் செய்து, ஒவ்வொருகணமும் மண்டை வெடித்து விடுமோ என்ற பயத்தை உண்டாக்கிற்று.

குண்டுப் புகை நாற்றமும், பெட்ரோல் நாற்றமும், மனித உடல்கள் எரியும் நாற்றமும், இன்னும் பலவகை நாற்றங்களும் கலந்து எழுந்த துர்வாசனையானது சொல்ல முடியாத அருவருப்பை உண்டாக்கிற்று.

இவ்வாறு குருதி ஆறு பாய்ந்து பிணக் காடாக மாறிக் கொண்டிருந்த பூப் பிரதேசத்துக்குள் ஆங்காங்கு சமுத்திர ஜலம் குபுகுபு என்று புகுந்து வந்து ஒரு நொடிப் பொழுதில் நாடு நகரங்களை மூழ்க அடித்து வெள்ளக் காடாக்கியது.

வெள்ளத்துக்குப் பயந்து அலறிக்கொண்டு ஓடிய ஆண் பெண் குழந்தைகளின் தலைமேல் வெடிகுண்டுகள் டபார் டபார் என்று விழுந்து அவர்களைச் சின்னாபின்னம் செய்து அழித்தன!

இந்த மகா கோர பயங்கர நரகக் காட்சியை அதிக நேரம் பார்க்கச் சகியாமல் அங்கிருந்து கிளம்பினோம்.

''கடவுளே! நீ எங்கே இருக்கிறாய்?'' என்ற தீனக்குரல் அவ்வளவு பயங்கர குண்டு சத்தங்களுக்கும் மத்தியில் இப்போது கொஞ்சம் பலமாகவே கேட்டுக் கொண்டிருந்தபடியால், அந்தக் குரல் வந்த திசையை நோக்கிச் சென்றோம்.

கருத்த மேக மண்டலத்துக்கிடையே தன்னந்தனியாக திவ்ய தேஜஸுடன் சோகமே உருவெடுத்தவர்போல் ஒரு மகா புருஷர் நின்றுகொண்டிருந்தார். அவர் கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. அவருடைய திருவாயிலிருந்துதான் ''கடவுளே! நீ எங்கே இருக்கிறாய்?'' என்ற பிரலாபம் வந்து கொண்டிருந்தது.

பார்த்த வுடனேயே அந்த மகா புருஷர்தான் ஏசுநாதர் என்று தெரிந்து போயிற்று.

கடவுளின் திருக்குமாரரும் தம் கண்ணீர் ததும்பிய கண்களினால் நம்மைப் பார்த்தார்.

நாம் கடவுளில்லை என்பது அவருக்கும் உடனே தெரிந்து போயிற்று!

''பெருமானே! தங்களுடைய இந்தக் கடுந் துயரத்தின் காரணம் யாதோ?'' என்று கேட்டோம்.

''தெரியவில்லையா? சொல்லவும் வேண்டுமா? அண்ணன் தம்பிகளைப் போல் அன்பாக இருக்கவேண்டியவர்கள் இப்படி கோர ராட்சதர்களைப் போல் ஒருவரை யொருவர் வதைத்துக் கொண்டு சாகிறார்களே? இவர்களைப் பாவத்தினின்று கரை யேற்றுவதற்காகத்தானே இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னால் என் இருதயத்தின் இரத்தத்தைச் சிந்தினேன்!'' என்றார் ஏசு.

''பிரபு! இருதரப்பாரையும் சேர்த்துச் சொல்கிறீர்களே? ஒரு கட்சியார் தங்களுடைய திருவாக்கை யல்லவா கடைப்பிடிக்கிறார்கள்?'' என்றோம்.

''அது எப்படி?'' என்று வியப்புடன் கேட்டார் ஏசு.

கடவுள் எங்கே?

"கடவுளே! நீ எங்கே இருக்கிறாய்?" என்னும் தீனமான, பரிதாபகரமான, நெஞ்சைப் பிளக்கக் கூடியதான, வேதனை நிறைந்த ஒரு குரல் கேட்டது.

அந்தக் குரலைக் கேட்கச் சகியாமல், இரண்டு காதுகளிலும் பஞ்சை வைத்துக்கொண்டு பார்த்தோம்.

அந்தக் குரலின் தீனமும் பரிதாபமும் அதிகமாயின.

கடற்கரை ஓரமாகச் சென்று நின்று பார்த்தோம். அலைகளின் பேரிரைச்சல் அந்த தீனக் குரலுக்குச் சுருதி போடுவதாக அமைந்தது.

வீட்டுக்கு வந்து ரேடியோவைத் திறந்து விட்டுப் பார்த்தோம். ரேடியோவின் அவ்வளவு அபஸ்வரங்களுக்கும் மத்தியில், "தெய்வமே! நீ எங்கே இருக்கிறாய்?" என்ற சோகக் குரல் தனியாக ஒலித்துக் கொண்டு தானிருந்தது.

உடனே, நமது அச்சும் சக்கரமும் இல்லாத, பெட்ரோலும் காரும் தேவையில்லாத விசித்திரமான ரதத்தில் ஏறிக்கொண்டு கிளம்பினோம்.

முதலில், தேவலோகத்துக்குப் போனோம்.

தேவலோகம் காலியாயிருந்தது!

இந்திரன், இந்திராணி, தும்புரு நாரதர், பிரகஸ்பதி, ஐராவதம், ஈ, காக்கை, கொசு — ஒன்றையுமே காணவில்லை.

தேவலோகத்துக்கு என்ன வந்துவிட்டது என்று அதிசயப்பட்டு விட்டு, அங்கிருந்து நேரே பிரம்மலோகத்துக்குப் போனோம்.

பிரம்மலோகமும் சூன்யமாயிருந்தது!

"இது என்ன கூத்து?" என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்து கிளம்பி நேரே வைகுண்டத்தை அடைந்தோம்.

வாசலில் துவார பாலகர்களைக் காணாத உடனேயே சுருக்கென்றது.

உள்ளே போய்ப் பார்த்தால், பெருமாளையும் காணோம்; தாயாரையும் காணோம்.

போயிருக்கும் இடத்தில் வசதியாகத் தூங்குவதற்கு ஆதிசேஷனையும் சுருட்டி எடுத்துக்கொண்டு போயிருந்தார்கள்!

வைகுண்டத்தின் வாசலில் "டு லெட்" என்று எழுதி ஒட்டிவிட்டுப் புறப்பட்டோம்.

கைலாசத்தை அடைந்தோம்.

அவ்விடத்து நிலைமையும் மேற்படி மேற்படியாகத்தான் இருந்தது!

சிவபெருமான் தமது யோக நிஷ்டையைக் கலைத்துக்கொண்டு எங்கேயோ போயிருந்தார்.

உமா தேவியும் குழந்தைகளுடன் போயிருந்தார்.

நந்தி, பிருங்கி முதலிய சிவகணங்களையும் காணவில்லை.

"சரி, வானலோகங்களில் ஒரு லோகமாவது நிச்சயமாய்க் காலியாயிராது" என்ற பூரண நம்பிக்கையுடன், யமலோகம் போய்ச் சேர்ந்தோம்.

அதாவது யமலோகம் இருந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தோம்

மற்ற லோகங்களில் வாசம் செய்தவர்களைக் காணவில்லையே தவிர, லோகங்கள் இருந்த இடத்தில் இருந்தன.

ஆனால், அந்தப் பொல்லாத யமன் தன்னுடைய நரகலோகத்தையே எடுத்துக்கொண்டு எங்கேயோ போயிருந்தான்.

சொல்லமுடியாத ஏமாற்றத்துடனும் வியப்புடனும் பூலோகத்தை நோக்கிப் புறப்பட்டோம்.


இத்தனை நேரமும், "கடவுளே! நீ எங்கே இருக்கிறாய்?" என்ற தீனக் குரல் மட்டும் நமது செவியை விட்டு அகலாமல் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

அது எங்கிருந்து வருகிறது என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டே பூலோ

-உம்மன்



வைஸ்ராய் வேவல் சமீபத்தில் ஐ.ஸி.எஸ். வர்க்கத்தாரைக் கலந்து ஆலோசித்ததாகத் தெரிகிறது.



பஞ்சாப்பில் திவானா மந்திரி சபையைக் கவிழ்க்க ஜின்னா செய்த தந்திர மந்திரங்கள் ஒன்றும் பலிக்கவில்லை.

கல்கி

மலர் 3 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 36

என்ன சேதி?

பார்லிமெண்டில் விறகுக்கட்டை

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இந்தியாவைப் பற்றி உபயோகமற்ற கேள்விகள் கேட்கப்படுவதைக் குறித்து நமது தலையங்கத்தில் எழுதியிருந்தோமல்லவா? அது சில பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு ரோஷத்தை உண்டுபண்ணி விட்டதாகத் தெரிகிறது. எனவே, ஒரு எம். பி. சென்ற வாரத்தில் சென்னை மகா நகரின் விறகுக் கட்டைப் பஞ்சத்தைப் பற்றிப் பார்லிமெண்டில் கேள்வி கேட்டார். அமெரி துரையும் வழக்கம்போல் "பஞ்சம் இல்லை!" என்று ஒரே சாதிப்பாய்ச் சாதித்து விட்டார். இந்தக் கேள்வி - பதிலைப் படிக்கும்போது சென்னைக் குடித்தனக்காரர்களுக்குக் கேள்வி கேட்டவரையும் பதில் சொன்னவரையும் விறகுக்கட்டையால் அடிக்கலாமா என்று எரிச்சல் உண்டாகுமல்லவா? அரை குறையாய் வெந்த உணவை ஜீரணிப்பதற்கு அந்த வயிற்றெரிச்சல் உதவும் என்பதில் சந்தேகமில்லை.

அப்புறம், விளக்குமாறு!


அடுத்த படியாக, சென்னைமா நகரின் விளக்குமாற்றுப் பஞ்சத்தைப் பற்றியும் யாராவது ஒரு பார்லிமெண்ட் அங்கத்தினர் சில கேள்விகளைப் போடுவார் என்று எதிர்பார்க்கிறோம். ஒருவேளை, விளக்குமாறு என்றால் என்ன என்பது சில எம். பிக்களுக்கு விளங்காமலிருக்கலாம். இதை அவர்களுக்கு விளக்குமாற்றால் (விளக்கும் + ஆற்றால்) விளக்கி விளங்கச் செய்வதற்காக யாராவது ஓர் அருந்தமிழ்ப் புலவரையோ, பெருஞ்சொற் விளக்கனாரையோ, பி. ஓ. எல். பரீட்சை கொடுத்த நவீனத் தமிழ் வித்வானையோ அனுப்பி வைத்தாலும் நல்லது தான். சென்னை வாசிகள் கவனிப்பார்களாக.


கர்வபங்க காண்டம்

ஜம்பத்துக்குப் பெயர்போன ஜனாப் ஜின்னா புராணத்தில் கர்வபங்க காண்டம் ஆரம்பமாகியிருப்பதாகத் தோன்றுகிறது. பஞ்சாப் பிரதம மந்திரியை ஜனாப் ஜின்னா முஸ்லிம் லீக்கிலிருந்து தள்ளப்போக, அதன் பயனாக மற்றும் மூன்று முஸ்லிம் மந்திரிகளும் சுமார் அறுபது முஸ்லிம் சட்ட சபை அங்கத்தினரும் முஸ்லிம் லீக்கிலிருந்து விலகிக் கொண்டிருக்கிறார்களாம். காயிதே ஆஜம் ஜின்னா பஞ்சாபிலேயே தமது தலைமை ஸ்தானத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணியிருக்கும்போது, இவ்விதம் பஞ்சாபில் முஸ்லிம் லீக் ஸ்தாபனத்துக்கே ஒரு பெரிய அடி விழுந்திருக்கிறது. எப்பேர்ப்பட்ட புத்திசாலியாயிருந்தாலும் அகப்பாவத்துக்கு இடங்கொடுத்தால் அழிய வேண்டியதுதான் என்பதற்கு இதுவும் ஓர் உதாரணமாகும். ஹிட்லர் ருஷியாவிலே காலை வைத்துத் தமது சர்வநாசத்துக்கு வழி தேடிக் கொள்வதுபோல், ஜனாப் ஜின்னாவும் பஞ்சாபில் தலையிட்டுத் தமது அதிகாரத்துக்குத் தாமே அழிவு தேடிக் கொண்டிருக்கிறார். ஒரு வேளை இந்தக் கர்வபங்கத்தின் பயனாக ஜனாப் ஜின்னா மகாத்மாவுடன் சமரசம் பேசி நியாயமான முடிவுக்கு வரவேண்டிய அவசியத்தை உணர்ந்தால், தேசத்துக்கே க்ஷேமம் ஏற்படும்.

ஐந்து ரூபாய் பரிசு: ***சென்ற இதழில் வெளியான "வாஸ்தவம்" என்னும் காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: எம். எஸ். பாப்பா, ஜி. டி. சென்னை.***

நிகழ்ச்சிச் சித்திரம்





யுத்த காலத்தில் மிகச் சிறந்த முதலீடு

முன் யோசனையுள்ள ஒவ்வொருவரும் பணத்தை இன்று சிறுகச் சிறுகவாவது சேமிக்கிறார்கள். இப்படிச் சேர்த்து வைத்த பணத்தை முதலீடாகப் போட்டு வைக்க விரும்புவது இயற்கையே. இச்சமயத்தில்தான் விஷயந் தெரியாதவர்களுக்கு, தங்கம், வெள்ளி, நகைகள், வீடு வாசல்கள், விற்பனைச் சரக்குகள் முதலியவற்றில் முதலிடக் கூடாதென்று எச்சரிக்கை செய்யவேண்டும். ஏன்? விலைவாசிகள் இறங்கிக் கொண்டே வருகின்றன. இன்றைய விலையில் வாங்கினால் வெகு சீக்கிரத்தில் நஷ்டமடைய நேர்ந்தாலும் நேரலாம். எப்படியும் யுத்தத்திற்குப் பிறகு நஷ்டமடைவது நிச்சயம்.

உங்கள் சேமிப்பைக் கொண்டு நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள் வாங்குவதுதான் மிகச் சிறந்த முதலீடு என்பதில் சந்தேகமே வேண்டாம். இந்த சர்ட்டிபிகேட்டுகள் ஒவ்வொன்றும் ரூபாய் 10 தான். 12 வருஷங்களுக்குப் பிறகு, அதற்கு உத்திரவாதமுள்ள மதிப்பு ரூபாய் 15. இந்த சர்ட்டிபிகேட்டுகளில் முதலிட்ட தொகைகளுக்கு வருமான வரி கிடையாது. ஒவ்வொருவரும் ரூ. 5,000 வரைக்கும் இந்த சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம். நாஷனல் ஸேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளின் மதிப்பு குறையவே குறையாது. மேலும் முதல் மூன்று வருஷங்களுக்குப் பிறகு, எப்பொழுது வேண்டுமானாலும் அவற்றைப் பணமாக மாற்றிக் கொள்ளலாம்.

உங்கள் சேமிப்பைக் கொண்டு

நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை

வாங்குங்கள். பணம், பத்திரமென்ற உறுதியுண்டு.

இன்றே தொடங்குங்கள்!

பதிவு செய்தல் — ஒரு நல்ல முன்னேற்பாடு.

அஸாம், வங்காளம், பீஹார், ஒரிஸா, சென்னை மாகாண வாசிகளின் சௌகரியத்துக்காக, லக்ஷ்மணபுரியில் ஐக்கிய மாகாண போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் மேற்பார்வையில் ஒரு மத்தியப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு டிபென்ஸ் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகள், தபாலாபீஸ் காஷ் சர்ட்டிபிகேட்டுகள், நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வைத்திருப்பவர்கள் தங்கள் சர்ட்டிபிகேட்டுகளின் விபரங்களை இலவசமாகப் பதிவுசெய்து கொள்ளலாம். இதன் மூலம், சர்ட்டிபிகேட்டுகள் காணாமற் போனாலுஞ்சரி அழிந்து விட்டாலுஞ்சரி, தங்கள் உரிமையை நிரூபிப்பது சுலபம். பூரா விபரங்களையும் உங்களூர் தபாலாபீசில் கேட்டுத் தெரிந்துக் கொள்ளுங்கள்.

ஸேவிங்ஸ் பாங்கி உள்ள எந்தத் தபாலாபீசிலும் நாஷனல் சேவிங்ஸ் சர்ட்டிபிகேட்டுகளை வாங்கலாம்.

CPU—414

கல்கி

பொருளடக்கம்

மலர் 3
இதழ் 36

1944 ஜூன் 18

தாரண ஆனி 5

★



★

பாரத நாட்டில் அவ்வப்போது ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர் போன்ற மகான்கள் அவதரித்து இந்நாட்டுக்குப் "புண்ணிய பூமி" என்னும் புகழ் பொருந்தும் என்பதை நிலை நாட்டிச் சென்கிருர்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஆத்ம சக்தியின் துணைகொண்டு சுவாமி விவேகானந்தர் ஆரம்பித்த பாரமார்த்திகத் திருப்பணியை வாழையடி வாழையாக இன்றைக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த துறவிகள் நாடெங்கும் நடத்தி வருகிருர்கள். அவர்களில் ஒருவரான சுவாமி ருத்ரானந்தரின் திருவுருவப் படம் இந்த இதழ் அட்டையில் விளங்குகின்றது. பூர்வாசிரமத்தில் இவருடைய நாமம் ஸ்ரீ முத்துகிருஷ்ணன் என்பது. மாயவரம் தாலுக்கா மணல்மேடு கிராமத்தில் ஒரு மிராசுதார் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, கலாசாலைக் கல்வியை மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் காரணமாக நிறுத்தியவர். பின்னல் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்து பாரமார்த்திகப் பணியும் சமூகத் தொண்டும் புரியலானர். இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பு கடல் கடந்து பல்லாயிரம் மைல்களுக் கப்பாலுள்ள பீஜித் தீவில் வாழும் ஏழைத் தொழிலாளி இந்தியர்களுக்குத் தொண்டு செய்யச் சென்ருர். இன்றளவும் அந்தக் 'கண்ணற்ற தீவில்' இருந்து தொண்டுசெய்து வருகிருர்.

எல்லோராலும் எவ்வகையிலும்
மேன்மையானதெனப் போற்றப்படும்

தமிழ் ஹரிச்சந்திரா

ப்ரகதி
தயாரிப்பு

★


இப்பொழுது தமிழ் நாட்டிலும்
ஆந்திர தேசத்திலும் வெற்றி
கரமாக நடைபெறுகிறது.

★

டிஸ்டிரிபியூடர்கள் :

FAMOUS TALKIE DISTRIBUTORS


MADRAS — MADURA — BANGALORE — BEZWADA — HUBLI



ஸன்லைட் கெமிஸ்டு
சொல்லுகிறார் . . .

“அசுத்தமான ஆடைகளிலிருந்து அழுக்குகளை தானாகவே போக்கக்கூடிய நுரைக்கே சுயமாக வெளுக்கும் நுரை என்று பெயர். அது எப்படி வேலை செய்கிறது? ஸன்லைட் நுரையில் “பிராணசக்தி” வாய்ந்த சோப் இருக்கிறது. ‘பிராணசக்தி’ வாய்ந்த சோப்பிற்கு அழுக்கைப் போக்கக்கூடிய சக்தி நிறைந்திருக்கிறது. அது தொட்ட உடன் அழுக்கைப் பற்றிக்கொண்டு தன்னுடன் அழுக்கை எடுத்துவிடுகிறது. ஆகையால் அழுக்கடைந்த ஆடைகளை ஸன்லைட் நுரையினால் கசக்கினால் இந்த ‘பிராணசக்தி’யானது உடனே வேலை செய்து நுரையை தண்ணீரில் அலசின உடன் அழுக்குப் போய்விடுகிறது.”

ஸன்லைட் சோப்



சுயமாக வெளுக்கும் நுரை உடையது

S. 62-39 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு